

ஆண்டறிக்கை
2022

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்

உள்ளடக்கம்

01 எங்களைப் பற்றி தொலைநோக்கு பணி ஆளுகைச் சபை

03 தலைவரின் செய்தி

04 நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை

06 சிறப்பம்சங்கள் 2022

08 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்

09 1.1 பேரண்ட, வர்த்தகம் மற்றும் போட்டித்தன்மை

19 1.2 ஊழியம், கல்வி மற்றும் சுகாதாரம்

26 1.3 புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல்

31 1.4 வறுமை மற்றும் சமூக நலன்புரி

36 1.5 விவசாயம் மற்றும் விவசாய வணிக அபிவிருத்தி

41 1.6 சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் காலநிலை மாற்றம்

45 ஆராய்ச்சி பணியாட்டொகுதி

47 உதவிப் பணியாட்டொகுதி மற்றும் உதவிச் சேவைகள

48 நிதி மற்றும் நிர்வாகம்

48 இடர் முகாமைத்துவ செயன்முறை

51 நிதிசார் சிறப்பம்சங்கள் 2013 - 2022

51 ஜீரூ வருமானத்தின் உள்ளடக்கம்

54 வெளியீடுகள் 2022

55 உள்ளக கருத்தரங்குகள்

60 IPS உள்ளகப் பயிலுநர் நிகழ்ச்சித்திட்டம் 2022

61 நிதி அறிக்கை

எங்களைப் பற்றி

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம் (IPS) என்பது பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்டுள்ள இலங்கையிலுள்ள மிகவும் உயர்நிலையிலுள்ள பொருளாதாரக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமாகும். கொள்கைகளை வகுப்பதற்காகவும் அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்காகவும் தேவையாக அமையும் வலுவான ஆதாரங்களை வழங்கும் பொருட்டு உயர் தரத்திலான, சுயாதீன கொள்கை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் எமது பணியாகும்.

மூன்று தசாப்பத்தங்களுக்கு மேலாக தமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல சிறப்புமிக்க சுயாதீன ஆராய்ச்சிகள் ஊடாக கொள்கை கற்கைகள் நிறுவகம் பொருளாதார கொள்கைகள் சார்ந்த ஆராய்ச்சித் துறையில் சிறப்புமிக்கதொரு மையமாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக ஆசியப் பிராந்தியத்தில் தற்போதைய சமூக பொருளாதார கொள்கை உருவாக்கத்திற்கு ஏதுவான பல மிகவும் முக்கியமான துறைகள் உள்வாங்கப்படுகின்றன. அறிக்கைகள், ஆராய்ச்சிப் பத்திரங்கள், சஞ்சிகைகளுக்கான கட்டுரைகள் மற்றும் பகிரங்கமான சமர்ப்பணங்கள் ஊடாக விரிவான முறையில் பிரச்சாரம் செய்யப்படுகின்ற அனுபவ அடிப்படையிலான ஆராய்ச்சிகளின் ஊடாக பொருளாதார கொள்கை உருவாக்கத்திற்கு உதவி வழங்கும் தனது வெற்றிகரமான சாதனையை உருவாக்குவதற்கு இந்நிறுவனத்தின் வலுவான உள்ளக ஆராய்ச்சிக் குழுவின் பரிபூரணமான திறன் இவ் விடயத்துக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

தொலைநோக்கு

இலங்கையின் சமூக பொருளாதார நிலைமாற்றத்திற்கு உந்துசக்தியாக அமையும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நிறுவனமாக மாற்றமடைதல்.

பணி

சமூக - பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக நம்பகத்தன்மைமிக்க, நுண்ணறிவினை வழங்கும் உயர் தரத்திலான சுயாதீனமான கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதின் ஊடாக எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் கொள்கை நிகழ்ச்சி நிரலை சீரமைத்தல் மற்றும் அவற்றின் ஊடாக அனைத்து இலங்கையர்களின் வாழ்கையின் மீதும் சாதகமானதொரு தாக்கத்தை ஏற்படுத்துதல

ஆளுகைச் சபை

சிரேஷ்ட பேராசிரியர் எச்.டீ கருணாரத்ன
உபவேந்தர், கொழும்பு பல்கலைக்கழகம்

கலாநிதி. எம். கே. சீ. சேனாநாயக்க
பணிப்பாளர் நாயகம், அரச நிதிக் கொள்கை திணைக்களம், நிதி அமைச்சு (பதவி வழியில்)

திரு.ஆர். எச். டபிள்யூ. ஏ. குமாரசிறி
பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி அமைச்சு (பதவி வழியில்)

திரு. ஏ. ஆர். கே. விஜேசேகர
உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி (பதவி வழியில்)

பேராசிரியர் அனோமா எஸ்.பீ. அபயரத்ன
பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், பேராதனைக் பல்கலைக்கழகம்

பேராசிரியர். ஓ. ஜீ. தயாரத்ன பண்டா
பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் ஆர்.எம். அபயரத்ன
சுமூகவியல் திணைக்களம், பேராதெனிய பல்கலைக்கழகம்

கலாநிதி. துஷ்னி வீரகோன்
நிறைவேற்றுப் பணிப்பாளர், இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்

தலைவரின் செய்தி

2022 ஆம் ஆண்டில் இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து இச்செய்தியை வெளியிடுவதற்கு வாய்ப்பு கிட்டியமை தொடர்பாக நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். கொள்கைகளை வகுப்பதற்கும் அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் தேவையான வலுவான ஆதாரங்களை வழங்கும் பொருட்டு உயர் தரத்திலான மற்றும் சுயாதீனமான கொள்கைகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் பணியாகும். கொள்கை கற்கைகள் நிறுவகம் 2022ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள் ஊடாக அவ்வாண்டில் இலங்கையின் பொருளாதாரத்தின் உண்மையான நிலை மற்றும் நாட்டின் நடுத்தர கால கொள்கை சவால்களையும் தெளிவுபடுத்தும் அதன் பாரம்பரிய பணியை மேலும் நிறைவேற்றியது. குறிப்பாக கொள்கை கற்கைகள் நிறுவகம் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடும் தனது முதன்மை அறிக்கையாகிய இலங்கை: பொருளாதார நிலை எனும் அறிக்கை இலங்கையில் வெளியிடப்படும் முதன்மையான, நடைமுறை சாத்திய மிக்க சுயாதீன பொருளாதார ஆராய்ச்சி அறிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.



சிரேஷ்ட பேராசிரியர் எச்.டீ கருணாரத்ன

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல், கோவிட் - 19 பெருந்தொற்று, அன்னியச் செலாவணி நெருக்கடி, கடன் நெருக்கடி மற்றும் அரசியல், சமூக நிலையற்ற தன்மை போன்ற பல நெருக்கடிகளின் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் கடந்த மூன்று வருட காலமாக மிகவும் நெருக்கடிமிக்க காலமொன்றிற்கு முகம் கொடுத்தது. பொதுவாக நெருக்கடிமிக்க ஒரு காலகட்டம் நிலவுகின்ற போது ஆராய்ச்சிகளை மேற்கொள்வது அவ்வளவு இலகுவானதொரு விடயமல்ல. அத்தகைய சூழலொன்று நிலவும்போது வழக்கமான தரவு சேகரிப்பு முறைகளை பின்பற்றுதல், வளங்களை அடைந்து கொள்ளுதல், திறமையான ஆராய்ச்சியாளர்களை தக்கவைத்துக் கொள்ளுதல், கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட நபர்களை நேரடியாக தொடர்பு கொள்ளுதல், போக்குவரத்து முறைமைகள் மற்றும் உரிய நேரத்தில் பெறுபேறுகளை வழங்குதல் போன்ற விடயங்கள் முற்று முழுதாகவே வேறுபட்டதொரு நிலையை கொண்டிருப்பதுடன் இலங்கையில் காணப்பட்ட நிலைமையும் இதற்கு ஒன்றும் விதிவிலக்கல்ல.

தற்போது இலங்கையில் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் எதிர்கொள்ளும் பாரிய நெருக்கடி யாதெனில் அதிக பணவீக்கம், அரசாங்கம் அறவிடும் அதிக வரி, சமூக நிலையற்ற தன்மை, அரச மற்றும் தனியார் துறையினால் விதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு கட்டுப்பாடுகள் போன்ற வெளிவாரியான காரணங்கள் நிமித்தமாக தகைமையுடைய திறமையான ஆராய்ச்சியாளர்கள் தக்க வைத்துக் கொள்வதற்கு இயலாமை ஆகும். அத்தகையதொரு சூழ்நிலையிலும் கொள்கை கற்கைகள் நிறுவகம் உயர் தரத்திலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் உரிய நேரத்தில் ஆராய்ச்சி பெறுபேறுகளை வெளியீடுதல் போன்றவற்றின் ஊடாக தலை சிறந்த ஒரு ஆராய்ச்சி நிறுவனமான தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்கு ஆற்றலைப் பெற்றுள்ளது. இந்த வருடம் முழுவதிலும் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியமை தொடர்பாக நிறுவகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி திருமதி து'னி வீரகோன் உள்ளிட்ட பணியாட்டொகுதிக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்று நாம் முகம் கொடுக்கும் பல்வேறு புதிய வகையிலான நெருக்கடிகளை வெற்றி கொள்வதற்கு புதிய தீர்வுகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுதல் அத்தியாவசியமானதாகும். இலங்கை பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதால் புதிய ஆராய்ச்சிகளை திட்டமிடுதல், புதிய தரவுகளை சேகரித்தல், புதிய ஆராய்ச்சியின் முறைமைகளை பின்பற்றுதல், ஆராய்ச்சி செயன்முறையில் உள்ளடங்குதலை உறுதி செய்தல், புதிய கண்டுபிடிப்புகளை முன்வைத்தல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையின் போது ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளை ஈடுபடுத்திக் கொள்ளுதல் அத்தியாவசியமானதாகும். ஆகவே. இலங்கை முன்னர் ஒருபோதும் முகம் கொடுக்காத வகையிலான நெருக்கடிகளுக்கு தற்போது முகம் கொடுத்துள்ள நிலையில் கொள்கை சார் தீர்வுகளை ஆராயும் பொருட்டு புத்தாக்கம் மற்றும் இடைத்தொடர்புமிக்க அணுகுமுறைகளையும் பின்பற்ற வேண்டுமென கொள்கை வகுப்பாளர்களுக்கும் தொழில்வாண்மையாளர்களுக்கும் எமது நிறுவனத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு பரிந்துரைக்க விரும்புகின்றேன்.

நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியையும் அதனால் விளைந்த தாக்கங்களையும் கவனத்திற் கொள்ளும் போது அது இற்றைவரை முழுமையாக உணரப்படாவிடினும் கடந்த 12 மாத காலமும் கூட நாட்டின் பிரசைகளைகளைப் பொருத்தமட்டில் அது அவர்களை ஆழ்ந்து சிந்தனையில் மூழ்கடித்த கால கட்டமாகவே அமைந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளை அண்மித்துள்ள இத்தருணத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் தாபன கட்டமைப்புகள் எவ்வாறு இந்தளவிற்கு பொருளாதாரச் சரிவைக் கொண்டு வரும் வகையில் சீர்குலைந்தன என்பதைப் புரிந்துகொள்வதற்கு பெரும் சுய பகுப்பாய்வுகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் (IPS), எமது ஆராய்ச்சிகள், இலங்கையின் பலவீனமான அரச நிதி நிலை, அதிகரித்துவரும் வெளிநாட்டுக் கடனுக்கான வெளிப்பாடு மற்றும் வெளிப்புற அதிர்ச்சிகளால் பாதிக்கப்படக்கூடிய தன்மை குறித்து கடந்த தசாப்தத்தில் தொடர்ந்து எச்சரிக்கைகளை விடுத்துள்ளது. கொள்கை கற்கைகள் நிறுவகம் (IPS) உண்மையிலேயே மிகவும் முன்கூட்டியே, அதாவது 2013 ஆம் ஆண்டு போன்றதொரு காலப்பகுதியிலேயே அதன் வருடாந்த முதன்மை அறிக்கையாகிய 'இலங்கை: பொருளாதார நிலை ('Sri Lanka: State of the Economy') எனும் தனது அறிக்கையில் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதுடன் தொடர்புடைய அபாயநேர்வுகளை சுட்டிக்காட்டியதுடன் அடுத்தடுத்த அறிக்கைகளில் சிக்கலைச் சமாளிப்பதற்கான வலுவான கொள்கை பதிலளிப்புகள் பின்பற்றப்பட வேண்டுமென வலியுறுத்தி அதற்கு அழைப்பு விடுத்தது. நாம் கடந்தவந்த பாதையை மீட்டிப் பார்த்தல் முக்கியமான படிப்பினைகளை எமக்கு வழங்கிய போதிலும் அத்துடன் நின்றுவிடாது இலங்கையை பொருத்தமட்டில் தற்போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் அனைவரும் ஒன்றுபட்டு உடனடி பாதிப்பை எதிர்கொள்வதற்கான வழிவகைகளைத் தேடுவதாகும்.



துஷ்னி வீரகோன்

2022 இல் எங்கள் பணித் திட்டம், குறுகிய கால கொள்கை கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்கும், நடுத்தர கால தாக்கங்களை அடையாளம் கண்டு பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் பொருத்தமான கொள்கை தீர்வுகளை வரைபடமாக்குவதற்கும் ஜீளு கொண்டுள்ள சுறுசுறுப்பை நிரூபிக்கின்றது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (ளுனுபுள) சட்டகத்தின் மூலம் நாட்டின் மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மற்றும் பின்தங்கிய குடும்பங்களின் மீது மேற்படி நெருக்கடி விளைவிக்கும் தாக்கம் மற்றும் அதன் விகிதாசாரமற்ற தொடர்பு ஆகியவற்றை பகுப்பாய்வு செய்யும் பணியை நாங்கள் தொடங்கினோம். நாடு முழுவதிலும் அதிகரித்து வரும் வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை ஆகியவற்றிலிருந்து வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், வருமான இழப்பு, வேலைகள் மற்றும் வாழ்வாதாரங்கள் ஆகியவற்றின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட தாக்கங்கள் ஆகியவற்றை தெளிவாக காணக்கூடியதாக உள்ளது. இந்த ஆண்டு 'இலங்கை: பொருளாதார நிலை' அறிக்கையானது தேசிய முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கும் விளைவுகளை கண்காணிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சிக்கலான மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய சமூக-பொருளாதார சவால்களின் ஆழமான பகுப்பாய்வில் இந்த அம்சங்களை ஒன்றாகக் கொண்டுவருகிறது.

பொருளாதார நெருக்கடியின் மிகவும் இக்கட்டான சில சிக்கல்களை நன்கு புரிந்துகொள்வதற்கும் தீர்வுகளைக் கண்டறிவதற்கும் பல விரிவான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. "இலங்கையில் முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார் துறை ஊழியர்களுக்கான பணிபுரியும் மற்றும் ஓய்வுபெறும் வயது சார்ந்த சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துதல்" எனும் விடயத்தின் கீழ் உள்வாங்கப்படும் ஊழியர்கள் மற்றும் அவர்களுக்கு கிடைக்கும் நலன்களின் மட்டங்கள் ஆகியவற்றில் காணப்படும் இடைவெளிகளைக் கண்டறிவதற்காக, தற்போதுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வரைபடமாக்குதல் பற்றிய ஆய்வுகளும் இதில் உள்ளடங்கும். இவ்விடயத்தில் உள்ளடங்கும் மற்றொரு ஆய்வானது உணவு இழப்பின் தன்மை, நோக்கம் மற்றும் அடிப்படைக் காரணங்களை ஆராய்வதற்கும், இழப்பைக் குறைப்பதில் விளையும் நடத்தை மாற்றத்தில் உள்ள புத்தாக்கங்களின் செயல்திறனை வெளிப்படுத்துவதற்கும் "சூட்டிகையான வணிக நடைமுறைகள் மூலம் உணவு இழப்புக் குறைப்புப் வழிவகைகளை உருவாக்குதல்" என்பதில் கவனம் செலுத்துகிறது. புலம்பெயர் ஊழியர்கள் சார்ந்த துறையில் அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் உளசமூக உறவுகளை மீண்டும் நிலைநிறுத்துவதை உறுதி செய்வதற்காக, "நாடு திரும்பும் புலம்பெயர்ந்த ஊழியர்களின் திறன்கள், அபிலாஷைகள் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு சவால்கள்" ஆகியவற்றைக் கண்டறியும் ஆய்வு இடம்பெற்று வருகிறது. அதேபோன்று, பொதுச் செலவின மீளாய்வு விடயத்தில், "இலங்கையில் சமத்துவமின்மை மற்றும் வறுமை மீதான அரச நிதிக் கொள்கையின் தாக்கத்தை மதிப்பிடுதல்" என்ற தலைப்பில் முக்கிய வரி மற்றும் பரிமாற்றத் நிகழ்ச்சித்திட்டங்களின் நிகழ்வுகளை மதிப்பிடுவதற்கும், இவை அனைத்தையும் உள்ளடக்கிய மீட்சிக்கு உதவும் பொருட்டு அரச நிதிக் கொள்கை பாதையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்வதற்கும் ஒரு ஆய்வு இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆய்வுகள் மற்றும் முந்தைய ஆராய்ச்சிகளை பயன்படுத்திக் கொண்டு, ஜீளு ஆனது இலங்கை அரசாங்கத்தின் (GOSL) பொருத்தமான கொள்கை பதிலளிப்புகளை வகுக்கும் முயற்சிகளுக்கு உதவி வழங்கும் விடயத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் (NPD) இணைந்து, ஜீளு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் ஒரு தேசிய கொள்கை சட்டகத்தை உருவாக்கியதுடன் இச்சட்டகமானது


அண்மித்த காலத்திற்கான பேரண்ட பொருளாதார நிலைப்படுத்தலை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் அத்துடன் மீட்சி மற்றும் நடுத்தர மற்றும் நீண்டகால நிலைபேறான வளர்ச்சி ஆகியவற்றுக்கான விபரமான கொள்கை மறுசீரமைப்புகளை விபரித்தல் போன்றவற்றிற்கு உதவி வழங்குகின்றது. மேலும், சனாதிபதி செயலகத்தினால் கூட்டப்பட்ட பொருளாதார நிலைப்படுத்தல், மீட்சி மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல் தொடர்பான குழுவின் உறுப்பினர் என்ற வகையில், வரவுசெலவு திட்டத்தை தயாரிக்கும் செயன்முறைக்கு உதவி வழங்கும் பொருட்டு நிதி அமைச்சின் அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு குறிப்பிட்ட கொள்கை முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் அதேவேளை பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு கொள்கை உள்ளீடுகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பொது நிதி பற்றிய பாராளுமன்றக் குழுவின் வேண்டுகோளுக்கு அமைவாக பொது நிதி நிர்வாகத்தின் சட்டப்பூர்வ மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு உதவியளிக்கும் பொருட்டு கொள்கை கற்கைகள் நிறுவகம் "வரவுசெலவுத் திட்டம் 2023: அரசாங்கக் கொள்கை முன்னுரிமைகள் பற்றிய மதிப்பீடு" ஒன்றையும் தயாரித்தது.

சர்வதேச அரங்கிலும் கொள்கை கற்கைகள் நிறுவகம், "இலங்கையின் ஏற்றுமதித் துறையில் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதகமான சுகாதார விளைவுகளை குறைக்கும் பொருட்டு தொற்றுநோய்க்கான பதிலளிப்புகளை மேம்படுத்துதல்" என்ற அதன் முன்மொழிவுக்காக உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட பல வருட ஆராய்ச்சி மானியத்தை வென்றதன் மூலம் வலுவான மற்றும் வீரியமான ஆராய்ச்சியை வழங்குவதற்கான அதன் நற்பெயரை தொடர்ந்து உறுதிப்படுத்தியது. இது, "இலங்கையில் ஆரோக்கியமான உணவுமுறைகளை மேம்படுத்துவதற்கான அரச நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வலுப்படுத்துதல்", "புகையிலை கட்டுப்பாடு", மற்றும் "பெண்களுக்கான கண்ணியமான வேலைகளுக்கான சமூக, பொருளாதார மற்றும் சட்டரீதியான தடைகள்" தொடர்பாக ஏற்கனவே நாம் மேற்கொண்டு வரும் பல வருட ஆய்வுக் கருதட்திட்ட வரிசையில் சேர்க்கிறது. இந்தப் புதிய வேலைத் திட்டங்களுடன், நமது உலகளாவிய அணுகலை விரிவுபடுத்த உதவும் வகையில் புதிய கூட்டாண்மைகளும் நிறுவப்பட்டன 2022 ஆம் ஆண்டில் மட்டும், IPS நிறுவகம் கனடாவின் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி மையம், டியூக் பல்கலைக்கழகம், சர்வதேச விவசாய ஆராய்ச்சிக்கான அவுஸ்திரேலிய மையம், உலக வங்கி மற்றும் ஊழியர் இடம்பெயர்வு மற்றும் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான தெற்காசிய மையம் போன்ற பல்வேறு கூட்டாளர்களுடன் தொடர்ந்து பணியாற்றியது. IPS நிறுவகத்தின் ஆய்வாளர்கள் பரந்த அளவிலான வெளியீடுகள், கருத்தரங்குகள் மற்றும் ஊடக ஈடுபாடுகளில் தங்கள் ஆய்வு ஆதாரங்கள் மற்றும் யோசனைகளை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பரந்தளவிலான பார்வையாளர்களுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

நாம் எமது நிபுணத்துவத்தை வலுவான ஆதாரங்களை உருவாக்கும் பொருட்டு அளவுசார் மற்றும் பண்புசார் முறைகள் இரண்டிலும் தொடர்ந்தும் பயன்படுத்துவதால், பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகள் மற்றும் கொள்கை ஊடாக மாற்றத்தை கொண்டு வரக்கூடிய வழிமுறைகள் பற்றிய நமது புரிதலை மேம்படுத்துதல் எனும் எமது மேலான நோக்கம் இதன் மூலம் தெளிவாக புலப்படுகின்றது. இந்த ஆண்டறிக்கையானது எமது ஆறு தொனிப்பொருள் சார்ந்த ஆய்வுத் துறைகள் ஊடாக உங்களை அழைத்துச் சென்று, ஒவ்வொரு துறையிலும் நாங்கள் செய்த பணிகளை, குறிப்பாக எங்கள் ஆராய்ச்சி சார்ந்த கற்கைகள் மற்றும் கொள்கை ஈடுபாட்டுடன் தொடர்புடைய செயற்பாடுகளை எடுத்துக்காட்டும்.

சவால்மிகு செயற்பாட்டுச் சூழலொன்று காணப்பட்ட போதிலும், ஜீளு நிறுவகத்துக்கு 2022 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில் வலுவான முன்னேற்றத்தை அடைய முடிந்தது. வீட்டிலிருந்து இணையவழியில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம், வழங்கப்படும் சேவைகளை கண்காணிப்பதில் சிரமங்கள் மற்றும் அதிக பணவீக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிக செலவீனங்கள் உள்ளடங்கலாக பொருளாதாரக் கொந்தளிப்பு எமக்கு கணிசமான சவால்களை விடுத்த போதும் கருத்திட்ட பாதீடுகளை அவ்வப்போது மீளாய்வு செய்தல் மற்றும் எங்கள் ஆராய்ச்சி முன்மொழிவு சமர்ப்பிப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் இந்த அபாயநேர்வுகளை வெற்றிகரமாக தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம். உண்மையில், தேசிய கணக்காய்வு அலுவலகம் ஜீளு நிறுவகம் பற்றிய கணக்காய்வின் போது திறம்பட இயங்கியுள்ளதை உறுதிசெய்யும் வகையில் தமது கணக்காய்வு அறிக்கையில் சாதகமான குறிப்புகளை வழங்கியுள்ளமை வலுவான முறைமைகளும் நடைமுறைகளும் எமது நிறுவகத்தில் நடைமுறையில் உள்ளன என்பதை தெளிவாக எடுத்தியம்புகின்றது.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் தீவிரமான ஆராய்ச்சி மற்றும் கொள்கை வடிவமைப்பு மற்றும் நிதி நிலைத்தன்மை ஆகிய அதன் முக்கிய நோக்கங்களை அடைவதில் கடந்த 12 மாதங்களில் பெற்ற எந்தவொரு முன்னேற்றமும் எங்கள் பல்வேறு மற்றும் திறமையான ஆராய்ச்சி மற்றும் உதவி ஊழியர்களின் அர்ப்பணிப்பு இல்லாமல் இருந்திருப்பின் சாத்தியமானதாக இருந்திருக்க இயலாது. அவர்களின் கடின உழைப்புக்கு எனது பாராட்டுகளை பதிவு செய்வதற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்வதுடன் எங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலை செம்மைப்படுத்தவும், கொள்கை யோசனைகளை உருவாக்கவும், பரப்பவும் நாங்கள் எதிர்பார்த்துள்ள இத்தருணத்தில் அதற்கு ஆதரவு வழங்கிய நிறுவகத்தின் தலைவர் மற்றும் ஆளுகை குழுவிற்கு நன்றி தெரிவிப்பதற்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.



துஷ்னி வீரகோன்
நிறைவேற்றுப் பணிப்பாளர்

சிறப்பம்சங்கள்

சனவரி

கலாநிதி பிலேஷா வீரரத்ன, சனவரி 17 ஆம் திகதி, TV1 இன் Face the Nation நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்புதல் மற்றும் முறையான பணம் அனுப்பும் வழிமுறைகளை பயன்படுத்துதல் ஆகியவை பெருமளவு குறைந்துள்ளமைக்கான காரணத்தை கலந்துரையாடும் நிகழ்வு.



மார்ச்

கலாநிதி கங்கா திலகரத்ன 'இலங்கையில் தற்போதைய சமூகப் பாதுகாப்பு முறைமைகளின் விரிவான சூழமைவுசார்ந்த வரைபடம்' தொடர்பான அறிக்கையின் கண்டுபிடிப்புகளை கொழும்பில் மார்ச் 14 ஆம் திகதியன்று சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண் நிதி, சுயதொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரிடம் கையளித்தார்.



மே

மே 12, வொஷிங்டனை தளமாகக் கொண்ட அட்லாண்டிக் கவுன்சிலின் தெற்காசிய மையத்தால் நடத்தப்பட்ட மெய்நிகர் நிபுணர் குழு கலந்துரையாடலில், இலங்கைக்கு தனது உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்கு உதவும் பொருட்டு தெற்காசிய நாடுகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பினை பேணிவருதல் பற்றி கலாநிதி அசங்க விஜேசிங்க கருத்துக்களை முன்வைத்தார்.



பெப்ரவரி

கலாநிதி நிஷா அருணதிலக, ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர் என்ற வகையில் பெப்ரவரி 9 ஆம் திகதி நடைபெற்ற "கண்ணியமான வேலையில் பெண் தொழிலாளர் படை பங்கேற்பதற்கு காணப்படும் சூழமைவு சார்ந்த தடைகளை நிவர்த்திசெய்தல்: பல நாடுகளைக் கொண்ட, கலப்பு முறைகள், பால்நிலை- கூருணர்வுப் பகுப்பாய்வு", எனும் தலைப்பிலான பல நாடுகள் சார்ந்த ஆய்வின் தொடக்கத்தில் நோக்கங்களையும் பகுப்பாய்வு சட்டகத்தையும் விளக்கினார்.



ஏப்ரல்





தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலை ஏற்றுமதியாளர்கள், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், இலங்கையில் பதுரலிய, மாத்தறை, காலி, இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய ஏழு தேயிலை உற்பத்திப் பிரதேசங்களில் உள்ள தேயிலை சிறுதோட்ட மாவட்ட சங்கங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட தேயிலை தொழிற்துறையின் பங்கீடுபாட்டாளர்களுக்கு "சிலோன் டி" இற்கான புவியியல் குறியீடு (GI) முறைமையை நடைமுறைப்படுத்தும் கருத்திட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளராக டிலானி ஹிரிமுத்துகொடகே, "இலங்கையில் தற்போதைய புவியியல் குறியீடு (GI) முறைமை" பற்றிய சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

ஜூன்

பிரியங்கா ஜயவர்தனவினால், "இலங்கையில் சர்க்கரை கொண்ட இனிப்பு பானங்கள் சார்ந்த (SSB) தெரிவுகளில் போக்குவரத்து சமிக்ஞை விளக்கு அடையாளமிடல் முறையின் (TLL) தாக்கம்" பற்றியும் சுனிமலி மதுராவலவினால், "கருத்துக்கள், நிறுவனங்கள் மற்றும் சக்தி இயக்கவியல்: இலங்கையில் ஆரோக்கியமான உணவு முறைகளை ஊக்குவிப்பதற்கான அரச நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அரசியல் பொருளாதாரம் பற்றியும் ஜூன் 28-30 திகதிகளில் விவசாயம், போசனை மற்றும் சுகாதாரம் பற்றிய கல்விக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 7வது வருடாந்த விவசாயம், போசனை மற்றும் சுகாதாரம் பற்றிய (ANH) கல்விக் கழகத்தின் ஆராய்ச்சி மாநாடு 2022 இல், சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன.





சிறப்பம்சங்கள்

ஜூலை

விவசாயம், போசணை மற்றும் சுகாதார அகடமியினால் ஏற்பாடு செய்யப்பட்ட 7 ஆவது வருடாந்த மெய்நிகர் வழியிலான விவசாய, போசணை மற்றும் சுகாதார அக்கடமி வீக் ஆராய்ச்சி மாநாடு 2022 இல், சுனிமலி மதுரவால யோசனைகள்இ நிறுவனங்கள், மற்றும் அதிகார இயக்கவியல் பற்றிய சுவரொட்டி சமர்ப்பணமொன்றை முன்வைத்தார்.





செப்டம்பர்

விவசாயம், கால்நடைகள், மீன்பிடி, வனவியல் மற்றும் சுற்றாடல் தொடர்பான உலகளாவிய மற்றும் தேசிய சூழமைவுகளில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றங்கள் குறித்து கலாநிதி எரந்ததி பத்திராஜா, செப்டெம்பர் 27 ஆம் திகதி கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட FAO நாட்டுக்கான நிகழ்ச்சி செயலாக்க சட்டகத்தை (CPF) தயாரிப்பதற்கான நிபுணர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்.



நவம்பர்

கலாநிதி து'னி வீரகோன், நவம்பர் 15 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி (CBSL) ஏற்பாடு செய்திருந்த 'வரவுசெலவுத் திட்டத்தை பகுத்து ஆராய்தல் 2023' அரங்கில் முக்கிய கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் வலுவான அமுலாக்கத் திறன் ஆகியவற்றின் அவசியத்தை பற்றி எடுத்துரைத்தார்.



ஆகஸ்ட்


ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவனம் (ADBI) மற்றும் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் (ANU) ஏற்பாடு செய்திருந்த பசுபிக் அபிவிருத்தி ஆராய்ச்சி செயலமர்வில், "UNREDD நிகழ்ச்சித்திட்டம் பப்புவா நியூ கினியாவுக்கு பயனுள்ள பசுமை மீட்புத் தீர்வுகளை வழங்கியுள்ளதா?" என்ற தலைப்பில் கலாநிதி லக்மினி பெர்னாண்டோ செப்டம்பர் 27 ஆம் திகதி ஒரு ஆராய்ச்சி கட்டுரையை சமர்ப்பித்தார்.





அக்டோபர்

அக்டோபர் 25 ஆம் திகதி, கலாநிதி சமன் கெலேகம கேட்போர் கூடத்தில் "நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கொள்கை நடவடிக்கைகளை முன்னெடுத்தல்" என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில், நிறுவகத்தின் வருடாந்த முதன்மை அறிக்கையான 'இலங்கை: பொருளாதார நிலை 2022' ஐ கொள்கை கற்கைகள் நிறுவகம் வெளியிட்டது.



டிசம்பர்

கலாநிதி மனோஜ் திப்பொட்டுவாவ, டிசம்பர் 19 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சில் 2022-2030 இற்கான தேசிய சுற்றாடல் திட்டம் (NEP) மற்றும் தேசிய சுற்றாடல் செயல் திட்டம் (NEAP) அறிமுகப்படுத்தப்பட்ட போது இலங்கையின் 'தேசிய சுற்றாடல் கொள்கையின்' முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.



ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்



ஆராய்ச்சி

இலங்கையின் சமூக-பொருளாதாரக் கொள்கை சூழமைவில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் (IPS) இன் வகிபாகம் யாதெனில் கொள்கை தீர்மானங்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதும் கொள்கை வகுப்பாளர்களுக்கு பல்வேறு கொள்கை விருப்பத் தெரிவுகளினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் புரிந்துகொள்ள உதவுவதும் சிறந்த பகுப்பாய்வு ஆதாரங்களுக்கு பங்களிப்பு வழங்குவதும் ஆகும். கொள்கை முரண்பாடுகள், போதிய உட்கட்டமைப்பு இல்லாமை, சுகாதாரம் மற்றும் கல்வியில் பலவீனமான பொது சேவை வழங்கல், திறன் பற்றாக்குறை, வலுசக்திக்கான செலவுகள் அதிகரித்தல் மற்றும் நிதி மற்றும் நிலத்தை அணுகுவதில் உள்ள தடைகள் போன்ற வளர்ச்சிக்கான முக்கியமான இடர்பாடுகள் தொடர்பாக ஆழமானதொரு பகுப்பாய்வு தேவைப்படுகின்றது. மேலும், வருமானம் மற்றும் பொருள்வளத்தின் தொடர்ச்சியான ஏற்றத்தாழ்வுகள், சுற்றாடலுக்கு ஏற்படும் சேதம் மற்றும் இயற்கை வளங்கள் அருகிப்போதல், முதியோர் மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பிற மக்களின் நல்வாழ்வு, முதலியன, கொள்கைகளை மறுசீரமைப்பதற்காக முக்கிய பொருளாதார எண்ணக்கருக்கள், மாதிரிகள் மற்றும் குறிகாட்டிகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

நிறுவனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல் இவற்றையும் நாட்டின் தேசிய கொள்கை முன்னுரிமைகளுடன் இணைந்த பிற சிக்கல்களையும் நிவர்த்தி செய்வதை நோக்கியதாகவே அமைந்துள்ளது. பணி சார்ந்த நிகழ்ச்சித்திட்டம் ஆறு முதன்மை தொனிப்பொருள் துறைகளில் கவனம் செலுத்துவதுடன் அதன் கீழ் பல்வேறு ஆராய்ச்சி தலைப்புகள் ஆராயப்படுகின்றன. ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான கொள்கை சார்ந்த விடயங்களில் ஈடுபடும் நடவடிக்கைகள், ஆதார அடிப்படையிலான கண்டுபிடிப்புகளை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பரந்தளவிலான பார்வையாளர்களுக்கு பரப்புவதற்காக நடத்தப்படுகின்றன. இது ஆராய்ச்சி வெளியீடுகள், கொள்கை உள்ளீடுகளை வழங்குவதற்கான குழுக்களில் பங்கேற்றல், கருத்துத் தளங்களில் பங்களித்தல் மற்றும் கொள்கை கலந்துரையாடல் அரங்குகளில் ஈடுபடுதல் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

1.1 பேரண்ட, வர்த்தகம் மற்றும் போட்டித்தன்மை

நலிவடைந்த பொருளாதாரத்தை பொருத்தமட்டில் தோன்றும் நெருக்கடிகளுக்கு விரிவான தீர்வினை காணும் பொருட்டு சிறந்த பேரண்ட பொருளாதாரக் கொள்கைகளை தழுவிக்கொள்வதன் மூலம் நம்பகத்தன்மையை நிறுவுதல் முக்கிய முன்னுரிமைகளாக காணப்படுகின்றன. பல தசாப்த காலமாக பின்பற்றப்பட்ட தவறான பொருளாதார நிர்வாகம் மற்றும் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக இலங்கையில் நிலவும் தேக்கநிலையை நிவர்த்தி செய்வதற்கு வர்த்தகம் மற்றும் மாற்று விகிதக் கொள்கைகள் உள்ளிட்ட நிதிக் கருவிகளை மேம்படுத்துவது அவசியமாகும். பகிரங்கத் துறையினால் (பொது முதலீடு, அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள்) பயன்படுத்தும் வளங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகள், பொருளாதார ஊக்குவிப்புகளை மேம்படுத்துதல் (வர்த்தக மறுசீரமைப்புகள், விவசாயத்தில் விலை முறைகள், மின்சாரம் போன்ற அரச பயன்பாடுகள்) மற்றும் நிறுவன வினைத்திறனை மேம்படுத்துதல் (சுங்கம்) ,வரி நிர்வாகம்) நிலைபேறான வளர்ச்சி சார்ந்த முயற்சியின் முக்கிய இயக்கிகளாகும். பேரண்ட வர்த்தகம் மற்றும் போட்டித்தன்மை பற்றிய ஆராய்ச்சி ஆய்வுகள் 2022 இல் பின்வருவனவற்றில் கவனம் செலுத்துகின்றன

பேரண்ட பொருளாதாரக் கொள்கை மற்றும் கட்டமைப்பு மறுசீரமைப்புகள்

IPS இன் வருடாந்த முதன்மை அறிக்கை, இலங்கை: **பொருளாதார நிலை 2022** அறிக்கையானது உலகளாவிய சவால்கள் மற்றும் கொவிட்- 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட சமூக-பொருளாதார வீழ்ச்சி மற்றும் 2022 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபுளு) அடைவதில் இலங்கையின் முன்னேற்றம் ஆகியவற்றை ஆராய்கிறது. உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுக் கொள்கை நிலைமைகளின் மத்தியில் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி குறித்த நாட்டின் பரந்த பொருளாதாரக் கண்ணோட்டத்தையும் அறிக்கை மதிப்பிடுகிறது. **பொருளாதார நெருக்கடிகள் மற்றும் மீட்சிக்கான கொள்கை சீராக்கங்கள்** பற்றிய ஒரு முக்கிய அத்தியாயத்தில், து'னி வீரகோன் இலங்கையின் பேரண்ட பொருளாதாரக் கொள்கை சூழமைவை பகுப்பாய்வு செய்து, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதை எடுத்துரைத்து கடன் மீட்பு மற்றும் கடுமையான திரவத்தன்மை இடர்பாடுகளை எளிதாக்குவதற்கு பேரண்ட-ஸ்திரப்படுத்தல் முயற்சிகள், பண இறுக்க கொள்கைக்கு அமைவாக அரச நிதியை சீர்படுத்துதல் ஆகியவற்றிற்கு அழைப்பு விடுத்தார்.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட SDG நிதியளிப்பு இடைவெளியை நிரப்புவதற்கான பொது முதலீடு குறித்த ஆய்வு, SDG களின் அர்த்தமுள்ள முன்னேற்றத்திற்குத் தேவையான வருடாந்த முதலீட்டை மதிப்பிட்டதுடன் பொது முதலீட்டு பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்க விவேகமான கொள்கை மறுசீரமைப்புகளை முன்மொழிந்தது. இந்த ஆய்வு நிதியைத் திரட்டுதல், SDG துறைகளில் முதலீடுகளை ஈடுபடுத்துதல் மற்றும் SDG களை ஊக்குவிப்பதில் நேர்மறையான தாக்கங்களை அதிகப்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள சவால்களை சமாளிப்பதற்கான கொள்கை வழிமுறைகளை வழங்கியது.

இடையூறுகள் நிறைந்த சகாப்தத்தில் இலங்கையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த சவால்கள் குறித்து புதுதில்லியின் ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்புகளுடன் (RIS) நிறைவு செய்யப்பட்ட மற்றுமொரு ஆய்வு, பூரண வறுமை, சமத்துவமின்மை மற்றும் பலவீனமான வேலைவாய்ப்பு வளர்ச்சி ஆகியவற்றிற்கு இட்டுச்சென்ற கொவிட் - 19 தொற்றுநோயின் தாக்கத்தை ஆராய்ந்தது. தெற்காசிய அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு அறிக்கையானது தெற்காசிய நாடுகள் சமூக அபிவிருத்தியின் அடிப்படையில் பின்தங்கிய நிலையில் உள்ளதுடன் SDG அளவுகோல்களின் சூழமைவில் மோசமான நிலையில் உள்ளதால் பிராந்தியத்தில் உள்ள பொதுவான பிரச்சினைகளை ஆராய்வதற்காக நாட்டின் அனுபவங்களை கவனத்திற் கொண்டது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் செயலாற்றி இலங்கை: தேசிய கொள்கை சட்டகம் எனும் இலங்கை தொடர்பான மற்றுமொரு இலங்கைக்கான தேசிய கொள்கை சட்டகத்தை விருத்தி செய்வதை IPS நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அண்மித்த காலத்திற்கான பேரண்ட பொருளாதார நிலைப்படுத்தலை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகளுக்கு உதவிவழங்குவதுடன் மீட்சீ மற்றும் நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் நிலைபேறான வளர்ச்சிக்கும் தேவையான கொள்கை மறுசீரமைப்புகளை விவரிக்கின்றது. **இலங்கையில் சமத்துவமின்மை மற்றும் வறுமை மீதான அரச நிதிக் கொள்கையின் தாக்கத்தை** மதிப்பிடுதல் தொடர்பாக உலக வங்கியுடன் மேற்கொள்ளப்படும் மற்றொரு ஆய்வு, இலங்கையின் முக்கிய வரி மற்றும் பரிமாற்றத்

நிகழ்ச்சித்திட்டங்களின் நிகழ்வுகளை மதிப்பிடுவதுடன் அவை நாட்டின் அரச நிதிக் கொள்கையை எவ்வாறு பாதித்தன என்பதை ஆராய்கிறது. இந்த ஆய்வு துலேன் பல்கலைக்கழகத்திலுள்ள (Tulane University) நியாயத்திற்கான அர்ப்பணிப்பு நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட முறைமையைப் பயன்படுத்துவதுடன் குடும்ப வருமானம் மற்றும் செலவு மதிப்பீடு (HIES) 2019 இன் தரவுகளைப் பயன்படுத்தும்.

முந்தைய ஆண்டைப் போலவே, உலகப் பொருளாதார மன்றம் (WEF) வெளியிட்ட குறியீட்டை உருவாக்குவதற்கு பங்களிக்கும் வகையில் கொள்கை பகுப்பாய்வினை முன்வைத்தல் மற்றும் நிறைவேற்று கருத்து மதிப்பாய்வை நடாத்துவதற்கு வசதிபடுத்தல் ஆகியவற்றின் ஊடாக உலகளாவிய போட்டித்தன்மை அறிக்கைக்கு IPS பங்களித்தது. இந்த அறிக்கை நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் பிற பேரண்ட மற்றும் நுண் பொருளாதார அடிப்படைகள் போன்ற ஒரு நாட்டின் பொருளாதார உற்பத்தித்திறனை பாதிக்கும் கூறுகளின் ஆழமான மதிப்பீட்டை வழங்குகிறது. இது 110 இற்கும் மேற்பட்ட மாறிகளினால் உருவாகியுள்ளதுடன் அதில் மூன்றில் இரண்டு பங்கு அந்தந்த நாடுகளில் உள்ள வணிகத் தலைவர்களின் பிரதிநிதி மாதிரியின் மதிப்பாய்வினை உள்ளடக்கிய நிறைவேற்று கருத்துக் மதிப்பாய்விலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

கொள்கைக் குழுக்கள்:

- **பொருளாதார நிலைப்படுத்தல், மீட்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான குழு,** சனாதிபதி செயலகம்.
- **தேசிய பொருளாதாரப் பேரவைக்கான ஆலோசனைக் குழு,** சனாதிபதி செயலகம், (ஏப்ரல்- யூலை 2022).
- அரச நிதிக்குழு, இலங்கை பாராளுமன்றம்.
- **புகையிலை மற்றும் மதுபான வரிவிதிப்பு சூத்திரத்தை உருவாக்குவதற்கான துணைக் குழு,** புகையிலைமற்றும் மதுபானங்கள் பற்றிய தேசிய அதிகாரசபை.
- **சமூக அறிவியல் பற்றிய பணிக்குழு,** தேசிய விஞ்ஞான மன்றம்.
- **ஆராய்ச்சி மேற்பார்வைக் குழு,** உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு.

ஊகருத்துத் தளங்கள்:

- **இலங்கையின் இறையாண்மை வெளிநாட்டுக் கடன்: மறுசீரமைக்க வேண்டுமா இல்லையா?,** துஷ்னி வீரகோன், பேசும் பொருளாதாரம், ஜனவரி 12 மற்றும் , பைனான்சியல் டைம்ஸ், டெய்லி மிரர், தி மோனிங், சிலோன் டுடே, தி ஐலண்ட் மற்றும் லங்கா பிசினஸ் ஒன்லைன் பத்திரிகையில் வெளியான ஊடக அறிவித்தல்கள்
- **நாணயச் சபை: இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வு?** அசங்க விஜேசிங்க, பேசும் பொருளாதாரம் (Talking Economics) மார்ச் 31 மற்றும் டெய்லி மிரர், தி ஐலண்ட் மற்றும் ச ண் ட ே ஒப்சர்வர் பத்திரிகைகளுக்கான ஊடக அறிவித்தல்கள்
- **பொருளாதாரக் கட்டாயங்கள் பற்றிய குழு கலந்துரையாடல்,** அசங்க விஜேசிங்க, ஜூன் 6, TV1- 'மக்கள் அரங்கு' நிகழ்ச்சி.



- **இலங்கையின் துரித பணவீக்கம் மற்றும் நாணயக் கொள்கையின் வரம்புகள்,** *பேசும் பொருளாதாரம்,* மற்றும் டெய்லி மிரர், தி மோனிங், சிலோன் டுடே, தி ஐலண்ட், அத தெரண மற்றும் லங்கா பிஸ்னஸ் இணையவழி பத்திரிகையில் வெளியாகிய ஊடக அறிவித்தல்கள். ஜூலை 27, துஷ்னி வீரகோன்

- **இலங்கையில் தேக்கவீக்கம்? அபாயநேர்வுகள் மற்றும் கொள்கைப் பதிலளிப்புகள்,** பினுர செனவிரத்ன, *பேசும் பொருளாதாரம்,* ஆகஸ்ட் 10 மற்றும் டெய்லி மிரர், தி ஐலண்ட், சண்டே ஒப்சர்வர் மற்றும் சண்டே டைம்ஸ் ஆகிய பத்திரிகைகளில் வெளியான ஊடக அறிவித்தல்கள்.

- **இலங்கைக்கான ஒரு அரச நிதிப் பேரவை: நிதி நம்பகத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பாதை,** லக்மினி பெர்னாண்டோ, *பேசும் பொருளாதாரம்,* ஆகஸ்ட் 29 மற்றும் டெய்லி மிரர், டெய்லி நியூஸ், சண்டே ஒப்சர்வர் மற்றும் சண்டே டைம்ஸ் ஆகியவற்றில் வெளியான ஊடக அறிவித்தல்கள்.

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- **இலங்கை விளிம்பில்,** துஷ்னி வீரகோன், வெளிநாட்டு விவகாரம், வெளிநாட்டு உறவுகள் பற்றிய பேரவை, ஏப்ரல் 2022.

- **இலங்கையின் சட்டரீதியிலான நிலை பற்றிய நெருக்கடி,** துஷ்னி வீரகோன், கிழக்கு ஆசிய மன்றம், அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், ஜூலை 2022.



EASTASIAFORUM

Economics, Politics and Public Policy in East Asia and the Pacific

Home Topics COVID-19 Countries Contributors Quarterly About

Sri Lanka's crisis of legitimacy

16 July 2022

Author: Dushni Weerakoon, IPS

Sri Lanka's slide into political instability since April 2022 culminated in the resignation of former president Gotabaya Rajapaksa following public protests on 9 July 2022. The government's policy blunders and resistance to course correction were blamed for unleashing the harshest economic crisis on the Sri Lankan population in recent history. The former president's resignation paves the way for the formation of an interim all-party government.

Gotabaya Rajapaksa leaves behind an economy ravaged by shortages of essential goods, spiralling inflation and a historical-first debt default. Much of the blame for this sorry state of affairs can be placed on policy hubris.

The election-driven tax cuts and the stubborn resistance to reverse them were economically disastrous as COVID-19 pandemic-related spending pressures mounted. The central bank was made complicit in a money printing exercise that drained investors' faith in the currency — which lost more than 80 per cent of its value. This was coupled with an overly ambitious pursuit of environmental goals namely the banning of chemical fertilisers which devastated agricultural output in the process.

- **இலங்கை: பொருளாதாரம்.** துஷ்னி வீரகோன். நுரசழிய வெளியீடு (ed.) தெற்காசியா 2023, Routledge, Taylor & Francis, 2022.

- **கலோரி நுகர்வு திறன் மற்றும் இறக்குமதியை சார்ந்திருத்தல்: இலங்கையிலிருந்து கிடைக்கும் ஆதாரங்கள்,** அசங்க விஜேசிங்க மற்றும் திலானி கௌசல்யா, பொருளாதார பகுப்பாய்வு மற்றும் கொள்கை, தொகுதி 76, பக். 420-438, 2022.

- **பல்தேசிய கம்பனிகளின் வரி தவிர்ப்பு உத்திகள்: Apple Inc,** பற்றிய சம்பவக் கற்கை. ஊர்ா பெரேரா, பொருளாதார ஆராய்ச்சி பற்றிய இலங்கைப் பருவ இதழ் 9(1), பக்கம் 71-87, 2022

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்

- பொருளாதாரக் கொள்கைக்கான கூட்டாண்மை (PEP), PEP, ஏற்பாடு செய்த **தெற்கு-தலைமையிலான அபிவிருத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள்** தொடர்பாக செயல் குழு கலந்துடையாடலுக்கு PEP இன் குழு உறுப்பினர் அழைப்பு விடுக்கின்றார். பெப்ரவரி 11 (நஷா அருணதிலக)





- CT CLSA ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட CT CLSA மெய்நிகர் முதலீட்டாளர் நிகழ்வில் கலந்துரையாடல் குழு உறுப்பினர்: **IMF: மறுசீரமைப்புக்கான முன்னுரிமைகளின் ஒழுங்கு,** மார்ச் 23 (துஷ்னி வீரகோன்).

- லண்டன் ஸ்கூல் ஒப் இகோனமிக்ஸ் (LSE) தெற்காசிய மையம், ஏற்பாடு செய்த **பொருளாதாரத்தின் படுவீழ்ச்சி, வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் தெற்காசியாவில் கடன்கள்** பற்றிய வலையரங்கு, மே 12 ,குழு உறுப்பினர் (துஷ்னி வீரகோன்).



- அபிவிருத்தி பொருளாதாரம் மற்றும் நிலைபேறான தன்மை பற்றிய நிலையம் (CDES), மொனாஷ் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த 'இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி: சவால்கள் மற்றும் வாய்ப்புகள்' என்ற வலையரங்கில் **இலங்கையின் பொருளாதார நெருக்கடி பற்றிய சமர்ப்பணம், மே 24 (துஷ்னி வீரகோன்)**

- அயர்லாந்து இந்திய நிறுவனம், டப்ளின் சிட்டி பல்கலைக்கழகம், ஏற்பாடு செய்த **இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி குறித்த வலையரங்கில்** குழு உறுப்பினர். மே 26 (துஷ்னி வீரகோன்)

- ஹெங்காங் வெளிநாட்டு நிருபர்கள் கிளப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் **நெருக்கடியில் இலங்கை எனும்** தலைப்பில் கிளப் இணையவழி சூம் நிகழ்வில் கலந்துரையாடல் குழு உறுப்பினர்: ஜூன் 1 (துஷ்னி வீரகோன்)



- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'வணிக பொருளாதாரம் 2022' தொடர்பான வருடாந்த மாநாட்டில் **இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொள்வதற்கான பொருளாதார அரங்கம்: நிலைமாற்றத்திற்கான முன்னுரிமைகள்** அரங்கத்தில் குழு உறுப்பினர்: ஆகஸ்ட் 26 (துஷ்னி வீரகோன்)



- **தற்போதைய கொந்தளிப்புகளுக்கு மத்தியில் இலங்கை எவ்வாறு முதலீட்டிற்காக போட்டியிட முடியும்: பொருளாதார வளர்ச்சிக்கு எதிராக அரசநிதி பலப்படுத்தல்** எனும் தலைப்பில் நடைபெற்ற வலையரங்கில் குழு உறுப்பினர், இலங்கை வர்த்தக சம்மேளனம், செப்டெம்பர் 1 (துஷ்னி வீரகோன்).






- பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட **ஆசிய பொருளாதார கருத்தரங்கில்** விருந்தினர் பேச்சாளர், மெய்நிகர், 20 செப்டம்பர் (அசங்க விஜேசிங்க).
- "நிலைபேறான அபிவிருத்திக்கான 10 ஆம் ஆண்டு சர்வதேச மாநாட்டில்" **SDG நிதி இடைவெளியை நிரப்புவதற்கு இலங்கையில் பொது முதலீடு பற்றிய** சமர்ப்பணம், மெய்நிகர், 20 செப்டம்பர் (லக்மினி பெர்னாண்டோ)
- **இலங்கை: பொருளாதார நிலை 2022** அறிக்கையின் வெளியீட்டைக் குறிக்கும் வகையில் **பொருளாதார நெருக்கடிகள் மற்றும் நிலைப்படுத்தலுக்கான கொள்கை சீராக்கம்** பற்றிய சமர்ப்பணம்: IPS, கலாநிதி சமன் கெலேகம கேட்போர் கூடம், 25 அக்டோபர் (துஷ்னி வீரகோன்).
- இலங்கை மத்திய வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட (CBSL), மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற **2023 வரவு செலவுத் திட்டத்தை பகுத்து ஆராய்தல்** அரங்கின் குழு உறுப்பினர். (துஷ்னி வீரகோன்)
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் MBA பழைய மாணவர் சங்கம் மற்றும் Daily FT இனால் ஏற்பாடு செய்யப்பட்டு ஞாயபெசல-டுய ஹோட்டலில் நவம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற **2023 வரவு செலவுத் திட்டத்திற்கு பின்னர் அரங்கில்** குழு உறுப்பினர். (துஷ்னி வீரகோன்)
- புதுடில்லி, கார்னகி இந்தியாவால் கூட்டப்பட்ட 'உலகளாவிய தொழில்நுட்ப உச்சி மாநாடு 2022' இல் **டிஜிட்டல் அடையாளங்கள்: டிஜிட்டல் சங்கத்திற்கான அடித்தளக் கட்டமைப்புகள்** குறித்த அமர்வில் குழு உறுப்பினர், 29 நவம்பர்-1 டிசம்பர், (துஷ்னி வீரகோன்).



- **பலதரப்பு அபிவிருத்தி நிதி** பற்றிய சமர்ப்பணம்: **இலங்கையில் உள்ளடங்கலான மற்றும் நிலையான மீட்சியை ஆதரித்தல், "பலதரப்பு அபிவிருத்தி நிதி: தெற்காசியாவில் உள்ளடங்கலான மற்றும் நிலையான மீட்சிக்கு ஆதரவு",** கொள்கை உரையாடல் மையம் (CPD) மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான (OECD) அமைப்பு ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு, இணையவழி, டிசம்பர் 2 (நிஷா அருணதிலக).



வர்த்தகம் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு

IPS மூலம் நிதியளிக்கப்பட்ட **இலங்கை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளுக்கு இடையிலான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் ஏற்கனவேயுள்ள மற்றும் எதிர்கால பொருளாதார மதிப்பீடு** பற்றிய ஆராய்ச்சித் கருத்திட்டம், சாத்தியமான முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தின் (PTA) தாக்க மதிப்பீட்டின் விரிவான பொருளாதார பகுப்பாய்வை நடத்துகிறது. இது இலங்கைக்கு முக்கியமானதாக இருப்பதுடன் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைத் தணிக்கவும்; PTA உடன்படிக்கைகளில் இருந்து கிடைப்பதற்கு சாத்தியமான நன்மைகளை அதிகரிக்கவும் கொள்கை வகுப்பாளர்கள் தேவையான சீராக்க கொள்கைகளை உருவாக்குதல் வேண்டும். இக் கருத்திட்டமானது, சீனா, தாய்லாந்து, இந்தியா, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் இலங்கையின் PTA உடன்படிக்கைகளின் விளைவுகளை மதிப்பிடுவதையும் பல்வேறு நாடுகளுடன் PTA களின் சாத்தியத்தன்மையை அளவிடுவதற்கான ஒரு குறியீட்டை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

IPS நிதியளித்த மற்றொரு ஆய்வு ஐரோப்பிய **ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதியில் GSP+ திரும்பப் பெறுதலின் தாக்கம்** குறித்து, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதியில் இத்தகைய முன்னுரிமை இழப்பின் ஏற்கனவேயுள்ள மற்றும் எதிர்கால விளைவுகளை பகுப்பாய்வு செய்யும். மேலும், பல நாடுகளின் தரவுத் தொகுப்பைப் பயன்படுத்தி ஏற்றுமதிகள் மற்றும் உலகளாவிய பெறுமதி சங்கிலி பங்கேற்பின் மீதான புளூ வர்த்தக ஏற்பாட்டின் விளைவை மதிப்பிடுவதற்கு முன்-பின் மதிப்பீடு நடத்தப்படும்.

அதேபோன்று, **இலங்கையின் ஏற்றுமதிகள் மற்றும் பொருளாதாரத்தின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தாக்கம்** குறித்த ஜீளு இன் ஆய்வானது இறக்குமதி கட்டுப்பாடுகளின் அளவு, அது உள்வாங்கும் இறக்குமதிகள் மற்றும் இலங்கையின் ஏற்றுமதி செயலாற்றுகையில் அதன் பாதுகாப்பு மற்றும் தாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்தது. மேலும், உள்ளீடு-வெளியீடு இணைப்புகள் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீதான தாக்கத்தை மதிப்பிட்டுள்ளது. செங்குத்தாக ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்திச் செயன்முறையில் உள்நாட்டு உற்பத்தியை எதிர்மறையாக பாதிக்கும் தடைசெய்யப்பட்ட உள்ளீடு வழங்கல் தொடர்பான பிரச்சினைகளையும் இலங்கையில் உள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்கள் உள்நாட்டில் இடைநிலைப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள உற்பத்திச் செலவுகளின் அதிகரிப்பு காரணமாக முகம்கொடுக்கும் பிரச்சினைகளையும் ஆராய்ந்துள்ளது.

சீனாவின் ஒரு **பாதை ஒரு மண்டலம் முன்முயற்சி (BRI)** பற்றிய ஆசியா மன்றத்துடனான (TAF) ஆய்வு இரண்டு அம்சங்களில் கவனம் செலுத்துகின்றது. (அ) இலங்கையில் (டீசுஐ) ஒரு பாதை மற்றும் ஒரு மண்டலம் முன்முயற்சியின் கீழ் சீனாவின் நிதியுதவியுடன் கூடிய அபிவிருத்தி கருத்திட்டங்களைச் சார்ந்த சமீபத்திய முன்னேற்றம் மற்றும் சம்பந்தப்பட்ட மறுசீரமைப்புகள் பற்றிய தகவல்களை மதிப்பாய்வு செய்து சேகரித்தல். மற்றும் (ஆ) இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட BRI முதலீடுகளால் பாதிக்கப்பட்ட உள்:ர் சமுதாயங்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் பற்றிய மதிப்பாய்வை வடிவமைத்தல்.

இலங்கையில் ஒரு அத்தியாயம்: பொருளாதார நிலை 2022 அறிக்கையில் பினுர செனவிரத்னவின் **உலகளாவிய பொருளாதார போக்குகள் மற்றும் இலங்கை மீதான தாக்கங்கள்** பற்றிய ஆக்கம் 2022 பெப்ரவரியில் ரஷ்யா - யுக்ரேன் நாடுகளுக்கிடையில் யுத்தம் தொடங்கியடையடுத்து உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள், உலகளாவிய வர்த்தம் மற்றும் மற்றும் பொருட்களின் விலைகள் மற்றும் இலங்கையில் வெளிப்புற சூழல் சார்ந்த போக்குகள் ஆகியவற்றில் ஏற்பட்ட தாக்கத்தை பகுப்பாய்வு செய்கிறது. இந்த அத்தியாயம் எரிபொருள், மருந்துகள் மற்றும் உணவுப் பற்றாக்குறை போன்ற அத்தியாவசியப் பற்றாக்குறைக்கு வழிவகுத்த செலவாவணி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளின் தாக்கங்களையும் இரசாயன உரங்களின் இறக்குமதி மற்றும் பயன்பாட்டைத் தடை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தவறான சிந்தனைக் கொள்கை தீர்மானத்தால் ஏற்பட்ட விளைவுகளையும் பற்றி வலியுறுத்திக் காட்டுகின்றது. காலநிலை மாற்ற நிலைமைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தியின் கீழ் வர்த்தகம் என்ற மற்றொரு அத்தியாயத்தில், அசங்க விஜேசிங்க மற்றும் சதுர்த்திக யோகராஜா ஆகியோர் வர்த்தகக் கொள்கைகள், வறுமை ஆகியவற்றின் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கத்தையும் உற்பத்தியாளர் நேயமிக்க வர்த்தகக் கொள்கை சார்புகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றனர்.

■ கருத்துத் தளங்கள்:


- **பங்களாதேஷ் - இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்: நன்மைகள் மற்றும் கொள்கை சவால்கள்,** அசங்க விஜேசிங்க மற்றும் சதுர்த்திக யோகராஜா, பேசும் பொருளாதாரம், ஜனவரி 20 மற்றும் டெய்லி மிரர், தி மோர்னிங், சண்டே ஒப்சர்வர், தி ஐலண்ட் மற்றும் அத தெரண ஆகியவற்றில் ஊடக வெளியீடுகள் / ஊடகங்கள்.

- **ர்'யா-உக்ரைன் மோதல்: இலங்கை மீதான பொருளாதார தாக்கங்கள்,** அசங்க விஜேசிங்க, *பேசும் பொருளாதாரம்,* பெப்ரவரி 28 மற்றும் பைனான்சியல் டைம்ஸ், டெய்லி மிரர், தி ஐலண்ட், அத தெரண மற்றும் லங்கா பிஸ்னஸ் இணையப் பத்திரிகை வெளியீடுகள் / ஊடகங்கள்.

- **உலகளாவிய எண்ணெய் விலை தளம்பல்: இலங்கை எவ்வாறு ஈடுகொடுக்க முடியும்?** பினுர செனவிரத்ன, பேசும் பொருளாதாரம், ஜூன் 1 மற்றும் தி ஐலண்டில் பத்திரிகை வெளியீடுகள்.

- **இலங்கையின் உணவு நெருக்கடி: இறக்குமதியின் பங்கு என்ன?** அசங்க விஜேசிங்க மற்றும் சதுர்த்திகா யோகராஜா, பேசும் பொருளாதாரம், ஜூன் 29 மற்றும் டெய்லி மிரர், தி மோனிங், தி ஐலண்ட் மற்றும் சண்டே ஒப்சர்வர் ஆகியவற்றில் வெளியீடுகள்.

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:



- **தெற்காசிய நாடுகளின் உலகளாவிய பெறுமதி சங்கிலி பங்கேற்பு மீது வர்த்தகக் கொள்கையின் தாக்கம், அசங்க விஜேசிங்க மற்றும் சதுர்த்திகா யோகராஜா,** ஆசிய பொருளாதார ஒருங்கிணைப்பு இதழ், 4(1), SAGE வெளியீடு, 2022.

- **தெற்காசிய நாடுகளின் உலகளாவிய மதிப்பு சங்கிலி பங்கேற்பின் மீதான வர்த்தகக் கொள்கை விளைவுகள்: பங்களாதேஷ் - இலங்கை வர்த்தக பேச்சுவார்த்தைகளின் தாக்கங்கள்,** அசங்க விஜேசிங்க மற்றும் சதுர்த்திகா யோகராஜா, சர்வதேச பொருளாதார ஆராய்ச்சி தொடர் எண். 14, கொழும்பு: இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம், 2022.

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- 13வது தெற்காசியப் பொருளாதார உச்சிமாநாட்டின் (SAES) தொடக்க அமர்வில் பேச்சாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் தகவல் முறைமையினால் (RIS) ஏற்பாடு செய்யப்பட்ட **தொற்றுநோய்க்கு பிந்தைய அபிவிருத்திக்கான கட்டாயத் தேவைகள்: பிராந்திய ஒத்துழைப்புக்கான சிக்கல்கள் பற்றிய பூர்வாங்க** அமர்வில் கலந்துரையாடல் குழு உறுப்பினர், புதுதில்லி, ஏப்ரல் 19 மற்றும் 20 (துஷ்னி வீரகோன்)



- ஆசிய பசுபிக் விவகாரத்திற்கான மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சீனாவின் **ஒரு பாதை ஒரு மண்டலம் முன்முயற்சி** குறித்த ஆசிய பசிபிக் கடல்சார் பாதுகாப்பு வட்டமேசை கலந்துரையாடலில் குழு உறுப்பினர். வொஷிங்டன் டி.சி. 14 பெப்ரவரி, மெய்நிகர், (அசங்க விஜேசிங்க)

- பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) யுனஎழஉயவய ஏற்பாடு செய்த 'இலங்கையை மீளமைப்போம்' மாநாட்டில் **கடன் நெருக்கடி, கட்டமைப்பு சீராக்கம் மற்றும் வர்த்தகக் கொள்கை** பற்றிய கலந்துரையாடலில் குழு உறுப்பினர், ஆகஸ்ட் 6 (அசங்க விஜேசிங்க)



- சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தினால் (IFPRI), புது தில்லியில், டிசெம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட 'தெற்காசியாவில் ஆரோக்கியமான உணவுகள் தாங்கக்கூடிய' **விலையில் கிடைத்தல்'மாநாட்டில் குறுக்குக் பாதைகள்: அரசு, பேரண்ட பொருளாதாரம் மற்றும் வர்த்தகக் கொள்கை** பற்றிய அமர்வில் குழு உறுப்பினராக பங்கேற்றல் (துஷ்னி வீரகோன்).

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் (SME), கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி

IPS ஆல் நிதியளிக்கப்பட்ட **இலங்கையில் பாம் எண்ணெய் கைத்தொழில்: ஒரு பொருளாதார பகுப்பாய்வு,** பற்றிய ஆய்வில் பாம் எண்ணெய் கைத்தொழில் மற்றும் அதன் தவறான புரிதல்கள் பற்றிய கொள்கை முடிவுகள் மறுபரிசீலனை செய்யப்பட்டதுடன் இது கொள்கை பரிந்துரைகள் மற்றும் பொது விழிப்புணர்வுக்கான வழிகாட்டியாக இருந்தது. சமையல் எண்ணெய் இறக்குமதிக்கான தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் 12,000 ஹெக்டெயார் அளவிலான உற்பத்தி செய்யாத நிலங்களில் எண்ணெய் பனை பயிர்செய்கையை இறக்குமதிக்கான மாற்று உத்தியாக ஊக்குவித்தது. எவ்வாறாயினும், இந்த வெளிநாட்டுப் பயிரை பயிரிடுவதற்கான சுற்றாடல் கிரயம் மற்றும் பாம் எண்ணை உட்கொள்வதனால் ஏற்படும் தெளிவற்ற உடல்நலக் கரிசனைகள் பற்றிய அக்கறைகள் அதிகரிப்பதால் இந்த முடிவு மாற்றப்பட்டது. எனவே, இந்த ஆய்வு மேற்கூறிய சூழலில் உள்ள சிக்கல்களைக் கவனத்திற் கொண்டது.

■ கொள்கைக் குழுக்கள்:

- **கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசியக் கொள்கையை உருவாக்குவதைக் கண்காணிப்பதற்கான வழிகாட்டல் குழு,** கைத்தொழில் மற்றும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவம்.

புலமைச் சொத்து

இலங்கை தேயிலைக்கான பயனுறுதிமிக்க புவிசார் குறியீடு (GI) அமைப்பை உருவாக்கி செயல்படுத்தும் பொருட் IPS நிறுவகம் **இலங்கை தேயிலைக்கான புவியியல் குறியீட்டு (GI) பதிவை விரைவுபடுத்துவதற்கான வரைபடமிடல்** ஆய்வில், சர்வதேச அபிவிருத்திக்கான பிரெஞ்சு விவசாய ஆராய்ச்சி மையத்துடன் (ஊஐசுயுனு) செயலாற்றி வருவதுடன் இந்த 3.5 ஆண்டுகால கருத்திட்டத்தின் முதல் கட்டம் 2022 இல் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. இலங்கை தேயிலைக்கு பயனுறுதிமிக்க GI அமைப்பை உருவாக்கி செயல்படுத்துவதற்கு இலங்கை தேயிலை பெறுமதி சங்கிலியில் உள்ள தனித்துவமான நடைமுறைகள் மற்றும் முறையான கட்டுப்பாடுகளை வரைபடமாக்குவதை இது இலக்காகக் கொண்டதாகும். இக் கருத்திட்டம் இலங்கை தேயிலை தொடர்பான சான்றளிப்பு அமைப்புகளை உருவாக்கி, GI பதிவுக்காக ஆவணப்படுத்தும். இத்தகைய முறைமைகளை விருத்திசெய்தல் இலங்கை தேயிலை பெறுமதிச் சங்கிலியில் உள்ளடங்கலான மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்காக நடைமுறையில் உள்ள சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை அம்சங்களை வலுப்படுத்தும். இலங்கை தேயிலைச் சபை (ளுடுவுடீ) மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான பிரெஞ்சு விவசாய ஆராய்ச்சி மையம் (CIRAD) இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

உணவு மற்றும் விவசாய அமைப்புடன் மேற்கொள்ப்படும் (FAO) **தேசிய பெறுமதி சங்கிலி மேம்பாடு, தேடிக்காணக்கூடிய தன்மை மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய ஆய்வு,** புஐ தொடர்பிலான ஒரு தனித்துவமான பதிவு அடிப்படையிலான தேசிய முறைமையை நிறுவியது. இலங்கையில் விவசாய பயிர்களுக்கு GI முறையை அறிமுகப்படுத்துவதற்காக இரண்டு முன்னோடி திட்டங்களை (கொலன்னா கருப்பு மிளகு மற்றும் சிலோன் கோல்டன் அன்னாசி) இந்த ஆய்வு தேர்ந்தெடுத்தது. மேலும், இரண்டு முன்னோடி புஐ பெறுமதி சங்கிலிகளுக்கான எதிர்கால திட்டங்களும் உருவாக்கப்பட்டன. தேசிய GI முறைமையை தொழிற்படுத்துவதற்கு பல பயிற்சிகள், வேலையமர்வுகள் மற்றும் மக்கள் மத்தியில் சென்று ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் இலங்கையை அரசாங்கத்தினதும் மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களினதும் திறன்களை கட்டியெழுப்பவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்துத் தளங்கள்:

- **பாரம்பரிய வானிலை முன்னறிவிப்பின் பின்னணியிலுள்ள விஞ்ஞானம்,** திலானி ஹிரிமுத்துகொடகே, விதுரவ விஞ்ஞான சஞ்சிகை, தொகுதி (39) ஜூலை - செப்டம்பர் 2022, தேசிய விஞ்ஞான மன்றம்.

- **இலங்கையில் பாரம்பரிய மருத்துவத்தின் திறனைப் பயன்படுத்துதல்,** டிலானி ஹிரிமுத்துகொடகே, இன்சைட், டிவலொப்மன்ட ஏசியா (ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒரு முன்முயற்சி), செப்டம்பர் 22.

- இலங்கை தயாரிப்புகளுக்கான புவியியல் குறியீடுகள் (GIs): உள்:ர் பதிவை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம், திலானி ஹிரிமுத்துகொடகே மற்றும் பியுமி ரசாங்கி, பேசும் பொருளாதாரம், மார்ச் 7 மற்றும் டெய்லி மிரர், தி மோனிங், தி ஐலண்ட், சண்டே ஒப்சர்வர் மற்றும் அத தெரண ஆகிய பத்திரிகைகளில் செய்திகள்.ஃ.ஊடகங்கள்.

- **இலங்கையில் கைப்பணி துறையைப் பாதுகாப்பதற்கான புவியியல் குறியீடு முறைமை,** திலானி ஹிரிமுத்துகொடகே, புவியியல் குறிகாட்டிகள் பற்றிய உலகளாவிய கண்ணோட்டங்கள் பற்றிய மாநாட்டு நடவடிக்கைகள், அபிவிருத்திக்கான விவசாய ஆராய்ச்சி (CIRAD) மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), பிரான்ஸ்: மொன்ட்டிபெலியர்.

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- சிறு பயிர்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த பொதுக் கூட்டத்தில் கொலன்ன மிளகு புஜ சங்கத்தின் முதலாவது கூட்டத்தில் **புவியியல் குறியீடுகளின் (GI) முக்கியத்துவம்** பற்றிய சமர்ப்பணம், பெப்ரவரி 10, (திலானி ஹிரிமுத்துகொடகே)



- சிறு தோட்டப் பயிர்கள் அபிவிருத்தி இராஞாங்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மாநாட்டில் **இலங்கை கோல்டன் அன்னாசி (CGP) மற்றும் கொலொன்ன மிளகு (KP) ஆகியவற்றுக்கான புவிசார் குறியீடு (GI) முறையைப் பெறுவதில் முன்னேற்றம் பற்றிய சமர்ப்பணம்,** பெப்ரவரி 28 ஆம் திகதி பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ், பத்தரமுல்ல (திலானி ஹிரிமுத்துகொடகே).

- விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச ஆராய்ச்சி மையம். யுபநஎந குசயடெயளைந னந னுநளநடழிநஅநவெ (AFD) மற்றும் இலங்கை தேயிலை சபை (SLTB) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் IPS ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட "இலங்கை தேயிலைக்கான புவியியல் அடையாள முறையை (GI) நடைமுறைப்படுத்துதல்" தொடர்பாக ஏழு தேயிலை பயிர்செய்கை செய்யும் பிராந்தியங்களில் நடத்தப்பட்ட பிராந்திய வேலையரங்குகளில் **இலங்கையில் புவியியல் முறைமை (GI)** பற்றிய சமர்ப்பணம். நவம்பர் 22-30 (திலானி ஹிரிமுத்துகொடகே).





- மாகாண விவசாயப் பணிப்பாளருடன் இணைந்த அதிகாரிகளுக்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் சிறு ஏற்றுமதி தோட்டப் பயிர்கள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட **இலங்கையில் புவிசார் குறியீடு (GI)** முறைமையை நிறுவுதல் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலையரங்கில் விருந்தினர் பேச்சாளர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பெருந்தோட்டப் பிரிவு, சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்தி, கம்பஹா மாவட்டம், டிசம்பர் 1 (திலானி ஹிரிமுத்துகொடகே).





.

1.2 ஊழியம், கல்வி மற்றும் சுகாதாரம்

தனிநபர்கள் தரமான வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கம் ஊழியச் சந்தையில் பயன்மிக்க வகையில் ஈடுபடுவதற்கும் தேவையான மனித வளங்களை தனிநபர்கள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு சிறந்த சுகாதாரம் மற்றும் தரமான கல்வி ஆகியவற்றை அடைந்துகொள்வதற்கான வாய்ப்பு முக்கியமானதாகும். எவ்வாறாயினும், கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான அணுகலை வழங்குவதற்கான தற்போதைய மாதிரிகள் இப்போது சவாலுக்கு உட்படுவதுடன் நிதி, மனித மற்றும் பௌதீக வளக் கட்டுப்பாடுகளை எதிர்கொண்டு புதிய முன்னேற்றங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அனைவருக்கும் தரமான அணுகலை உறுதி செய்தல் கடினமாக உள்ளமையே இதற்கு காரணமாக அமைகின்றன. IPS ஆராய்ச்சியானது, ஊழியம், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் கொள்கை சார்ந்த அறிவு இடைவெளிகளை நிவர்த்தி செய்வதன் மூலம் இந்தக் கொள்கை சவால்களுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

திறன் மற்றும் கல்வி

IPS மூலம் நிதியளிக்கப்பட்ட **கொவிட்-19 இன் போது தனியார் கற்பித்தலுக்கு காணப்பட்ட கிராக்கி: இலங்கைகான ஒரு ஆரம்ப மதிப்பீட்டு பயிற்சி: 2022** இல் நிறைவடைந்தது. இந்த ஆய்வு இலங்கையில் தனியார் கற்பித்தலுக்கான தேவையின் தற்போதைய போக்குகளைப் பற்றி சில கண்ணோட்டத்தைப் பெறுவதற்கான ஆரம்ப மதிப்பீட்டு பயிற்சியாகவும் கோவிட்-19 தொற்றுநோய் தொடங்கியதில் இருந்து இவை எவ்வாறு மாறியுள்ளன என்பதை ஆராய்வதற்குமான பயிற்சியாகவும் அமைந்தது. இது பெறப்பட்ட தனியார் கற்பித்தலுக்கான அணுகல் மற்றும் தரம் மீதான இத்தகைய மாற்றங்களின் தாக்கங்களையும் பிரதான கல்வி தொடர்பான தனியார் கற்பித்தல் துறையின் எதிர்பார்க்கப்பட்ட வகிபாகத்தின் மாற்றங்கள் மற்றும் அதன் திட்டமிடப்பட்ட எதிர்காலப் பாதை ஆகியவற்றையும் இது ஆய்வு செய்தது.

இலங்கை: பொருளாதார நிலை 2022, அறிக்கையில் பிரியங்கா ஜயவர்தன மற்றும் உ'ா பெரேரா ஆகியோரின் உலகளாவிய கல்வி மற்றும் **உலகளாவிய சுகாதாரத்தை நோக்கி எனும் அத்தியாயம், சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பான** முக்கிய பிரச்சினைகளை கலந்துரையாடுவதுடன் சரியான வயதில் பாடசாலை கல்வியை நிறைவுசெய்யாமைக்கான காரணங்கள், சமத்துவம் மற்றும் கல்வியில் SDG கள் மற்றும் நான்கு நிலைமாறுகால மாற்றச் சவால்கள் மற்றும் உலகளாவிய சுகாதார பாதுகாப்பு (UHC) நோக்கிய முன்னேற்றத்தில் அதன் தாக்கங்கள் ஆகியவற்றை கவனத்திற் கொள்ளப்பட்ட மற்றைய தலைப்புகளுடன் வலியுறுத்தியுள்ளது. தரமான கல்விக்கான அணுகலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதில் காணப்படும் கொள்கைத் தாக்கங்களை நூலாசிரியர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார நிறுவனத்துடன் (UNESCO) **"இலங்கையில் கல்வியில் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள்" கண்டுபிடிப்புகளை பரப்புதல் பற்றிய ஆய்வு: நாடு சார் ஆய்வு 2021/2022** உலகளாவிய கல்வி கண்காணிப்பு (GEM) தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் பற்றிய பிராந்திய அறிக்கையின் கண்டுபிடிப்புகளைப் பற்றி கவனம் செலுத்துகிறது. இந்த அறிக்கை கல்வியை வழங்குதல், நிதியளித்தல், ஒழுங்குவிதிகள், புத்தாக்கம் மற்றும் கொள்கைச் செல்வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பரிமாணங்களைப் பற்றி கவனம் செலுத்துகிறது. இந்தக் கருத்திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட விளைவுகளில் பின்வருவன அடங்கும்: வெளியீடு, பரப்புதல் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகள்.'.கொள்கை வகுப்பாளர்களை அடையும் நிகழ்வுகள்.

■ கொள்கை பற்றிய குழுக்கள்:

- **உயர்கல்வி மற்றும் பயிற்சிக்கான நிலையியற் குழு,** தேசிய கல்வி ஆணைக்குழு.
- **பொதுக் கல்வி மற்றும் ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்விக்கான நிலையியற் குழு,** தேசிய கல்வி ஆணைக்குழு.
- தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை மீளாய்வு, **தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு**
- **கல்வி ஆராய்ச்சி மேம்பாட்டுக்கான ஆலோசனைக் குழு,** கல்வி அமைச்சு

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- **கல்வியில் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள்: இலங்கையின் ஒரு சம்பவக் கற்கை, அ'ானி அபயசேகர,** திசலி டி சில்வா மற்றும் நி'ஷா அருணதிலக, தெற்காசியாவிற்கான உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கையின் பின்னணி அறிக்கை, 2022.

■ கருத்துத் தளங்கள்:

- **இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தனியார் கற்பித்தல்: மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்,** உ'ா பெரேரா, பேசும் பொருளாதாரம், மே 24, டெய்லி மிரர், தி ஐலண்ட், சண்டே ஒப்சர்வர் மற்றும் அத தெரண ஆகிய பத்திரிகை .'.ஊடக வெளியீடுகள்.

- **அதிகரித்து வரும் பாடசாலை இடைநிற்றல்கள்: இலங்கையில் பெருந்தோட்ட சிறுவர்களின் அவலநிலை, ஹிமானி விதானகே,** பேசும் பொருளாதாரம், நவம்பர் 17 மற்றும் தி ஐலண்டில் பத்திரிகை .'.ஊடக வெளியீடுகள்

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- **ஆற்றல் உருவாக்கம், மேம்பாடு மற்றும் பறிப்புக்கான வெளியாகவும் இடமாகவும் பாடசாலை: தொற்றுநோயிலிருந்து எழும் கலந்துரையாடல்கள் மற்றும் தாக்கங்கள்** பற்றி HDCA இனால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022 மனித அபிவிருத்தி மற்றும் ஆற்றல் சங்கம் (HDCA) மாநாட்டின் சமர்ப்பணம்: இணையவழி, ஆகஸ்ட் 19 (நிஷா அருணதிலக).



- நிறுவனத்தின் வருடாந்த முதன்மை அறிக்கையான **இலங்கை: பொருளாதார நிலை 2022,** வெளியிடுவதைக் குறிக்கும் வகையில், 'நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கொள்கை நடவடிக்கையை இயக்குதல்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் **அபிவிருத்திக்கான தேசியக் கொள்கைக் சட்டகம்** பற்றிய சமர்ப்பணம். IPS> 25 அக்டோபர் (நஷா அருணதிலக)

சுகாதாரம்

IPS-KIVU புகையிலை கட்டுப்பாட்டு விரிவாக்கத் திட்டம் - விரிவாக்கம் (கட்டம் I) கேன்சர் ரிசர்ச், UK மற்றும் KIVU இன்டர்நே'னல், UK, கொள்கை விவாதங்கள் மற்றும் தீர்வுகள் மீதான வெளிப்படுத்தக்கூடிய தாக்கத்தின் மீது கூர்மையான கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே, புகையிலை நுகர்வு மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் செல்வாக்கு செலுத்துவதற்கு சாத்தியம் உள்ள இடங்களில் கொள்கை செல்வாக்கிற்கான இலக்குகளை அடையாளம் காண்பதை ஒட்டுமொத்த கருத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. **அரசியல் பொருளாதார பகுப்பாய்வு - புகையிலை மறுசீரமைப்பு சிக்கல்கள் பற்றிய ஆய்வு,** புகையிலை கொள்கை சார்ந்த மறுசீரமைப்புகளில் முக்கிய பங்குதாரர்களை அடையாளம் கண்டு, அந்த செயற்பாட்டாளர்களிடையே அதிகார உறவுகளைப் புரிந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. **பீடி மற்றும் புகையில்லா புகையிலை - நுகர்வு மற்றும் சந்தை பகுப்பாய்வு** பற்றிய ஆய்வு பீடி நுகர்வு மற்றும் பல்வேறு வகையான புகையிலை உற்பத்திகளின் மாற்றீடுகளின் விலை மற்றும் வருமான கூருணர்வை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த புகையிலை கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம், **IPS KIVU புகையிலை கட்டுப்பாட்டு விரிவாக்கத் நிகழ்ச்சித்திட்டம்,** புற்றுநோய் ஆராய்ச்சி UK/KIVU இன்டர்நே'னல் நிறுவனத்துடன், சமூக ஊடக செயல்பாடு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகங்கள் மற்றும் மூலோபாய தொடர்பாடல் நடவடிக்கைகள் மூலம் குறைநிரப்பு செய்யும் உள் செல்வாக்கைப் பயன்படுத்தி கொள்கை மாற்றங்களை வலியுறுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இந்த ஆய்வின் நோக்கம் யாதெனில் எதிர்வரும் ஆண்டில் சிகரெட்டுகளுக்கான புகையிலை வரி அதிகரிப்பை ஊக்குவிப்பதை உள்ளடக்கியதாக இருப்பதுடன் இது போன்ற அதிகரிப்பு அரச வருமானத்தை அதிகரித்தல், இறக்குமதி செலவினங்களைக் குறைத்தல் மற்றும் அரசாங்க செலவினங்களைக் குறைத்தல் (சுகாதார செலவினங்களைக் குறைப்பதன் மூலம்) என்பவை **இடம்பெறுவதற்கான சான்றுகளை எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையில் புகையிலை கடத்தல் பற்றிய ஆய்வு: இரண்டாம் கட்டத்தில் தொடங்கப்பட்ட நோக்கெல்லையை நிர்ணயிப்பதற்கான ஆய்வு,** இலங்கையில் புகையிலை கடத்தல் பற்றிய விரிவான புரிதலை வழங்குவதையும், புகையிலை துறையின் கொள்கை உருவாக்கம் மற்றும் ஒழுங்குமுறைகளை எளிதாக்கும் வகையில் கடத்தலை கட்டுப்படுத்துவதற்கான

பயனுள்ள வழிகளை அடையாளம் காண்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. புகையிலை உற்பத்திப் பொருட்களின் மீதான அதிக வரி விகிதங்கள் எல்லை பாதுகாப்பில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் தரவுகள் வரையறுக்கப்பட்ட வகையில் காணப்படுதல் ஆகிய சூழமைவு சார்ந்த சிக்கல்கள் காரணமாக கடத்தலை மோசமாக்குகிறது என்ற வாதத்தின் மீதான உலகளாவிய ஆய்வுகளில் உள்ள வெற்றிடத்தை இந்த ஆய்வு நிவர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டியூக் பல்கலைக்கழகம் / பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் மன்றத்துடன் இணைந்து மேற்கொள்ளும் **மூலோபாய திட்டமிடல், வினைத்திறன் மேம்பாடு மற்றும் சுகாதார நிதியின் முன்னுரிமைக்கான தரவு மற்றும் அறிவை மேம்படுத்துதல் பற்றிய ஆய்வு,** இலங்கையின் சுகாதார நிதி கொள்கை ஈடுபாடு, கொள்கை வகுப்பாளர்களின் நிகழ்ச்சி நிரலின் முதல் மட்டத்தில் இருக்க வேண்டிய கொள்கை சார்ந்த சிக்கல்களை அடையாளம் காணுதல், நன்கொடையாளர் மாற்றத்திற்கு நாட்டை தயார்படுத்தவும், மாற்றத்தை ஒருங்கிணைக்க சுகாதார அமைச்சு (MOH) மற்றும் நிதி அமைச்சு (MOF) ஆகியவற்றுக்கு இடையே அதிக தொடர்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. டியூக் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய சுகாதாரத்தில் கொள்கை தாக்கத்திற்கான மையம் (CPIGH) உருவாக்கிய "அறிவு, திறன், கொள்கை (KCP) இடைவெளி சட்டகத்தின்" அடிப்படையில். இந்த ஆய்வு, இலங்கையில் சுகாதார நிதியளிப்பில் உள்ள குறிப்பிட்ட இடைவெளிகளைப் பற்றி சிறந்த புரிதலை உருவாக்கவும், அந்த இடைவெளிகளை நிரப்புவதற்கும் உதவும் கொள்கை தீர்வுகளை மேம்படுத்தவும் ஆதாரத்திலிருந்து கொள்கை வரையிலான மாற்றத்திற்கு இட்டுச்செல்வதற்கு ஈடுபடவும் உதவுகின்றது.

கனடாவின் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி மையத்துடன் (IDRC) இணைந்து நடாத்தப்படும் **இலங்கையில் ஆரோக்கியமான உணவுமுறைகளை மேம்படுத்துவதற்கான அரச நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வலுப்படுத்துதல்** பற்றிய ஆய்வு, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்களைக் குறைப்பதற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு அரச நிதி மற்றும் ஒழுங்குவிதி இடையீடுகளை செயல்திறனை ஆராய்கிறது (அதாவது சர்க்கரை கலந்த இனிப்பு பானங்கள் மீதான வரி (SSBs) மற்றும் SSB களில் சர்க்கரை அளவைக் குறிக்கும் போக்குவரத்து விளக்கு சமிக்ஞை அடையாளமிடல் முறை (TLL). கொழும்பைச் சுற்றியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் உணவுச் சூழலை கொவிட் -19 எவ்வாறு பாதித்துள்ளது என்பதையும் கொள்கை அமுலாக்கத்தில் உள்ள இடைவெளிகளையும் மேற்படி கொள்கை நடவடிக்கைகளின் செயல்திறன் மதிப்பிடப்படுவதையும் இந்த ஆய்வு ஆராய்கிறது. மேலும், இந்த ஆய்வு சர்க்கரை-இனிப்பு பானங்கள் மீதான வரி (SSBs), SSB களில் போக்குவரத்து விளக்கு சமிக்ஞை அடையாளமிடல் (TLL) முறை மற்றும் இலங்கையின் ஒட்டுமொத்த உணவு சூழல் ஆகியவற்றின் அரசியல் பொருளாதார அமைப்பையும் ஆராய்கிறது. இலங்கைச் சூழலில் மிகவும் பயனுறுதிமிக்க கொள்கைத் தீர்வுகளுக்கு ஆதரித்து வாதிடுவதற்கான பொது சுகாதார செயற்பாட்டாளர்களுக்கான உத்திகளை அடையாளம் காண்பதில் உதவுவதே இதன் நோக்கமாகும்.

■ மூஆராய்ச்சி வெளியீடுகள்:

- **அனைவருக்கும் சுகாதாரச் செலவு மற்றும் பொருளாதார வளர்ச்சி: இலங்கையின் விடயம்,** உஷா பெரேரா மற்றும் என். விக்கிரமரத்ன, எஸ். பிரேமரத்ன, என். விக்கிரமரத்ன மற்றும் யூ. மொரமுதலி, *அனைவருக்கும் பொருளாதாரம்,* (பக். 121-136), கொழும்பு பல்கலைக்கழக அச்சகம், 2022 .

- **சிறந்த உணவுமுறைகளுக்கான சிறந்த கொள்கைகள்: இலங்கையில் ஆரோக்கியமான உணவுமுறைகளை மேம்படுத்துவதற்கான நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அரசியல் பொருளாதாரம்,** சுனிமலி மதுரவாலா, கொள்கை நுண்ணறிவு, இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம், ஜூன் 3

கருத்துத் தளங்கள்:


- **சமிக்ஞை விளக்கு அடையாளச் சீட்டு: இலங்கையில் ஆரோக்கியமான உணவுத் தேர்வுகளை அவை ஊக்குவிக்கின்றனவா?,** பிரியங்கா ஜயவர்தன, *பேசும் பொருளாதாரம்,* ஏப்ரல் 6 மற்றும் டெய்லி மிரர், தி மோனிங் மற்றும் சண்டே ஒப்சர்வரில் வெளிவந்த பத்திரிகை வெளியீடுகள்.

- **புகையிலைக்கு வரி விதித்தல்: இலங்கையின் பொருளாதாரத்திற்கு பீடி வரியின் நன்மைகள் மற்றும் சுமைகள்,** ஏரந்ததி பத்திராஜா, பேசும் பொருளாதாரம், ஜூன் 20 மற்றும் டெய்லி மிரர் மற்றும் தி மோனிங் பத்திரிகையில் வெளிவந்த வெளியீடுகள்.

- **புகையிலைக்கு வரிவிதிப்பு: 2023 வரவுசெலவுத் திட்டம் ஏன் புகையிலை வரிகளை அதிகரிக்க வேண்டும், ஆராய்ச்சிக் குழு, பேசும் பொருளாதாரம், நவம்பர் 10 மற்றும் தி ஐலண்ட் பத்திரிகை வெளியீடுகள்.**

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- ஐக்கிய இராச்சியம், புற்றுநோய் ஆராய்ச்சி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச புற்றுநோய் தடுப்பு (ICP) நிகழ்ச்சித்திட்ட **புகையிலை கட்டுப்பாட்டு பங்குதாரர் நிகழ்வில், புகையிலைக்கு எதிரான இலங்கையின் போர்: கொள்கைத் தலையீடுகள், அடைவுகள் மற்றும்** நிறைவுசெய்யப்படாத நிகழ்ச்சி நிரல் பற்றிய சமர்ப்பணம், மெய்நிகர், மார்ச் 3 (சுனிமலி மதுராவல)



- **சமிக்ஞை விளக்கு அடையாளச் சீட்டுகள் (லேபிள்கள்) இலங்கையில் SSB தேர்வுகளை ஊக்குவிக்குமா?** மார்ச் 31 அன்று ஸருடே வணிக வலையமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு ஹில்டன் கொழும்பு ரெசிடென்ஸில் நடைபெற்ற போசனையை தீவிரப்படுத்துதல் (SUN) வணிக வலையமைப்பின் இரு வருடக் கூட்டத்தில். (பிரியங்கா ஜயவர்தன)

- ஆராய்ச்சி மற்றும் தகவல் முறைமையினால் (RIS) ஏற்பாடு செய்யப்பட்ட தெற்காசிய பொருளாதார உச்சிமாநாட்டில் அனைவருக்கும் **ஆரோக்கியம் மற்றும் டிஜிட்டல் சுகாதார முன்முயற்சிகள்** குறித்த அமர்வில் குழு உறுப்பினர், இணையவழி, ஏப்ரல், 20 (நஷா அருணதிலக)

- மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தினால் (ADIC), ஏற்பாடு செய்யப்பட்ட **மதுபானத்திற்கான முதலீட்டு சம்பவத்தை உருவாக்குதல்** குறித்த கருத்தரங்கில் கலந்துரையாடலில் ஈடுபடுதல். இணையவழி, 12 மே (நிஷா அருணதிலக)

- விவசாய, போசனை மற்றும் சுகாதார கல்வி நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 7வது வருடாந்த விவசாய, போசனை மற்றும் சுகாதார (ANH) கல்வி நிலையத்தின் வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டில், **இலங்கையில் சர்க்கரை-இனிப்பு பானங்கள் (SSB) தேர்வுகள் மீதான சமிக்ஞை விளக்கு அடையாளக் குறியிடல் (TLL) தாக்கம்** பற்றிய சமர்ப்பணம். மெய்நிகர், 28-30 ஜூன் (பிரியங்கா ஜயவர்தன).





- **கருத்துக்கள், நிறுவனங்கள் மற்றும் அதிகார இயக்கவியல்: இலங்கையில் ஆரோக்கியமான உணவுமுறைகளை மேம்படுத்துவதற்கான அரச நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அரசியல் பொருளாதாரம்** பற்றிய சுவரொட்டி சமர்ப்பணம்: விவசாயம், போசணை மற்றும் சுகாதார கல்வி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 7வது வருடாந்த விவசாய, போசனை மற்றும் சுகாதாரம் (ANH) கல்வி நிலையத்தின் வார ஆராய்ச்சி மாநாடு 2022, மெய்நிகர், 28-30 ஜூன் (சுனிமாலி மதுராவல).

- (முன் பதிவு செய்யப்பட்ட காணொளி கலந்துரையாடல்) ஐக்கிய இராச்சியம், புற்றுநோய் ஆராய்ச்சி ஏற்பாடு செய்த **'புகையிலை கட்டுப்பாட்டை ஊக்குவிப்பதில் உள்ள சவால்கள்'.** (Wil Paxton (Kivu International உடன்), Natalie Varney Hopkins (CRUK) and Jaya Kumar Gurung (NDRI) உலக புற்றுநோய் காங்கிரஸ், ஜெனிவா. 18-21 அக்டோபர் (நஷா அருணதிலக).

- **எதிர்நோக்குதல்: தெற்காசியாவில் உணவுமுறைகளை மாற்றுவதற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகளை தெரிவிப்பதற்கான நடவடிக்கைகள்** நிகழ்ச்சியின் நிறைவுக் கூட்டத்தில் கலந்தரையாடல் குழு உறுப்பினர், சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) மற்றும் IPS இனால் இணை அனுசரணை வழங்கப்பட்ட 'தெற்காசியாவில் போசனைக்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்: (D4N) உணவுமுறைகளை மாற்றுதல்' சர்வதேச மாநாடு: மெய்நிகர், நவம்பர் 10 (பிரியங்கா ஜயவர்தன)





ஊழியச் சந்தைகள்

கண்ணியமான வேலைக்கான அணுகலை மேம்படுத்துதல் பற்றிய இலங்கை: பொருளாதார நிலை 2022 அறிக்கையில் நிஷா அருணதிலக்க மற்றும் சுரே' ரணசிங்க ஆகியோரால் எழுதப்பட்ட ஒரு அத்தியாயம். குழந்தைகளை கொண்டிருத்தல் இன்னும் பெண்களுக்கு கண்ணியமான வேலையைப் பெறுவதற்குத் தடையாக இருப்பதைக் கண்டறிந்து, கண்ணியமான வேலைகளை உருவாக்குவதற்கும், முறையான வேலை வாய்ப்புகளுக்கான அணுகலை அதிகரிப்பதற்கும் ஊழியச் சந்தையில் பால்நிலை இடைவெளிகளைக் குறைப்பதற்கும் கொள்கை பரிந்துரைகளை முன்மொழிகின்றது.

■ கொள்கை குழுக்கள்:

- **தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான நிலையியற் குழு,** தேசிய கல்வி ஆணைக்குழு.


- **தேசிய மனித வள அபிவிருத்திக் கொள்கை,** தேசிய மனித வள அபிவிருத்தி பேரவை.

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- இலங்கையில் வீட்டிலிருந்து இணையவழியில் பணியாற்றுதல் கொள்கையின் வெற்றியாளர்கள் மற்றும் தோல்வியடைந்தவர்கள், சுரே' ரணசிங்க மற்றும் நஷா அருணதிலக, ஊழியம் மற்றும் புலம்பெயர்வு ஆராய்ச்சி தொடர் எண். 28, கொழும்பு: இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம், 2022.



ஒரு முச்சக்கர வண்டி ஈர்ப்பு: இலங்கையின் ஊழியச் சந்தையில் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் பற்றியதொரு பகுப்பாய்வு, திசலி டி சில்வா, அவ்வப்போது வெளியிடப்படும் ஆய்வுக் பத்திரத் தொடர் எண். 72, கொழும்பு: இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம், 2022.



சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- **நான்காவது கைத்தொழில் புரட்சி மற்றும் இலங்கையின் ஊழியச் சந்தை - நாம் தயாரா?** பற்றிய சமர்ப்பணம், வளர்ந்து வரும் நாடுகளில் 4.0 கைத்தொழில்துறை: சவால்கள், இடைவெளிகள் மற்றும் வாய்ப்புகள் (இணையவழி) தொடர்பாக கைத்தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI) ஏற்பாடு செய்த சர்வதேச மாநாடு, மார்ச் 16 (நஷா அருணதிலக).

- **பெண்களின் கண்ணியமான வேலைக்கான அணுகலைப் பாதிக்கும் சட்ட, சமூக மற்றும் பொருளாதார ஊழியச் சந்தை தடைகளை மதிப்பிடுவதற்கான ஆராய்ச்சி சிக்கல்கள்** மீதான பொருளாதாரக் கொள்கைக்கான (PEP) வருடாந்த கூட்டத்தில் கலந்துரையாடல் குழு உறுப்பினர், இணையவழி, ஜூன் 8 (நிஷா அருணதிலக).

- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ), ஏற்பாடு செய்த **இலங்கை மற்றும் மாலத்தீவில் ஆராய்ச்சியாளர்களாக இளைஞர்கள்** என்ற தலைமுறைகளுக்கு இடையிலான கொள்கை உரையாடலுக்கான கருத்துரையாளராக பிரியாவுடன், இணையவழி, செப்டம்பர் 26 (நஷா அருணதிலக)

- **இலங்கையில் இளைஞர்கள் தொழிலில் ஈடுபடக்கூடிய தன்மை** பற்றிய சமர்ப்பணம், யுனெஸ்கோவினால் ஏற்பாடு செய்யப்பட்டது, இணையவழி, செப்டம்பர் 29 (நிஷா அருணதிலக)

பெண்கள் மற்றும் ஊழியப்படை

சுகாதார தாக்கங்களிலிருந்து மீண்டெழும் திறனை மேம்படுத்தும் பொருட்டு தொற்றுநோய்க்கான பதிலளிப்பு நெறிமுறையை வடிவமைத்து, பணியிட நிலைமைகளை மேம்படுத்துவதற்காக ஒழுங்குறுத்தல் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துவதை நோக்கமாகக் கொண்டு, IPS நிறுவகம், **இலங்கையின் ஏற்றுமதித் துறையில் உள்ள பெண் ஊழியர்களுக்கு ஏற்படும் பாதகமான சுகாதார விளைவுகளைக் குறைப்பதற்கான தொற்றுநோய்க்கான பதிலளிப்பினை மேம்படுத்துதல்** குறித்த ஆய்வில் கனடா, அபிவிருத்தி ஆராய்ச்சி மையத்துடன் (IDRC) இணைந்து ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வு பெண்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் முக்கிய ஏற்றுமதித் துறைகளில் ஒரு துறையாக விளக்கும் இலங்கையின் ஆடைத் துறையை பற்றியும் தொற்றுநோயால் தூண்டப்பட்ட பொருளாதார நெருக்கடியின் மத்தியில் அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டுவதில் தைத்த ஆடைத் துறையின் முக்கியத்துவம் மேலும் முக்கியமானதாக மாறியுள்ளதைப் பற்றியும் கவனம் செலுத்துகின்றது.

பெண்களுக்கான கண்ணியமான வேலைவாய்ப்புகளுக்கான சமூக, பொருளாதார மற்றும் சட்டத் தடைகள் பற்றிய IPS இன் மற்றொரு ஆய்வு, கென்யா, செனகல், பிலிப்பைன்ஸ், இலங்கை, பிரேசில் மற்றும் பெரு ஆகிய ஆறு நாடுகளில் பெண்களுக்கான கண்ணியமான வேலைவாய்ப்புகளை அணுகுவதற்கான சூழ்நிலைத் தடைகளை நன்கு புரிந்துகொள்வதற்கும் மேலும் விரிவான கண்ணோட்டத்தை வழங்குவதற்கும் மற்றைய அளவுசார் மற்றும் பண்புசார் முறைமையின் கலவையைப் பயன்படுத்துகிறது.

இலங்கை: பொருளாதார நிலை 2022 அறிக்கையில் இலங்கையில் **பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல்** தொடர்பாக சுனிமலி மதுராவல மற்றும் கிமுத்து கிரிங்கோட ஆகியோரின் ஒரு அத்தியாயம், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களில் பெண்கள் இருப்பதையும், ஊதியம் பெறாத பராமரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் எனும் விடயமானது வேலை வாய்ப்புகள், ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களில் உள்ள இடைவெளிகள் போன்ற ஊழியச் சந்தைகளில் பால்நிலை தொடர்பான பல வேறுபாடுகளுக்கு ஒரு காரணமாக அமைகின்றதெனவும் சுட்டிக்காட்டுகிறது. பெண் தலைமைத்துவம் மற்றும் பெண்களின் பொருளாதார வலுவூட்டலின் பலன்களை நூலாசிரியர்கள் எடுத்துக் காட்டுவதுடன் உள்ளடக்குதல் மற்றும் வலுவூட்டுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் கொள்கை நிகழ்ச்சி நிரல்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றனர்.

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- **தொற்றுநோய்க்கு அப்பால் இலங்கையில் பெண்களின் வேலைவாய்ப்பு பாதிப்பைக் குறைத்தல், சுனிமலி மதுராவல,** கொள்கை நுண்ணறிவு, அபிவிருத்தி ஆசியா, மார்ச் 7.

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் பெண்கள் மற்றும் ஊடக ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "தெற்காசியாவில் ஊதியமில்லாத பராமரிப்பு வேலை மற்றும் பெண்களின் உழைப்பை அங்கீகரிப்பதில் சமத்துவம் மற்றும் நியாயம்" என்ற மாநாட்டில் ,நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை நோக்கி: இலங்கையில் ஊதியம் பெறாத பராமரிப்பு வேலைகளை அடையாளம் காணுதல், குறைத்தல் மற்றும் மறுபகிர்வு செய்தல், பற்றிய சமர்ப்பணம்.மெய்நிகர், அக்டோபர் 20 மற்றும் 21 (சுனிமாலி மதுராவல)





1.3 புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல்

அதிகரித்துள்ள உலகமயமாக்கல் மற்றும் நாடுகள் மத்தியில் தனிநபர் வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வரும் நிலையில் இலங்கையர்கள் வேலைக்காக மட்டுமன்றி கல்வி கற்பதற்காகவும் குடும்ப அலகுகளுக்காகவும் புலம்பெயர்கின்றனர். அதே சமயம் சுற்றுலாப் பயணிகளாகவும், வேலையாட்களாகவும் பயணிகள் இலங்கைக்கு வருகிறார்கள். மேலும், மக்கள் பொருளாதார வாய்ப்புகளைத் தேடி நகர மையங்களுக்குச் செல்வதால், இலங்கையின் உள்வாரியான இடம்பெயர்வு முறைகளும் மாற்றமடைகின்றன. இது பசுமையான, மிடுக்கான மற்றும் தாங்கும் திறனுடைய நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கும், நகரமயமாக்கலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும், இலங்கையின் நகர்ப்புறங்களில் வீட்டுவசதி, தரைப் போக்குவரத்து மற்றும் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும் அழைப்பு விடுக்கிறது.

புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தி

சர்வதேச நிறைவேற்று சேவைப் படையுடன் (IESC) இணைந்து **நாடு திரும்பும் புலம்பெயர் ஊழியர்களின் திறன்கள், அபிலாஷைகள் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு சவால்கள்** பற்றிய ஆய்வில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வு தற்போதுள்ள தரவு இடைவெளிகளைக் கண்டறிந்து, நாடு திரும்பிய புலம்பெயர்ந்த ஊழியர்களின் திறன்கள், அபிலாஷைகள் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு சவால்களை அடையாளம் காண்பதற்கு முதன்மை ஆய்வுகளை மேற்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. நாடு திரும்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நிலைபேறான மீள் ஒருங்கிணைப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான கொள்கை மற்றும் ஆதரித்து வாதாடும் முயற்சிகளை இந்த ஆய்வு பரிந்துரைக்கும். அளவுசார் மற்றும் பண்புசார் முதன்மைத் தரவு சேகரிப்பு உட்பட விரிவான பூர்வாங்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, ஆய்வின் இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு ஒத்திசைவான, கலப்பு முறை அணுகுமுறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

2022 இல் பல ஆய்வுகள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன. புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புடன் (IOM) மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு தெற்காசிய **கொழும்பு செயன்முறை உறுப்பு நாடுகளில் மீள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் விரிவான வரைபடமிடல்** பற்றிய ஆய்வு, புலம்பெயர்ந்தோரை மீண்டும் ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துவதுடன் இவ்விடயமானது பொருளாதார, சமூக மற்றும் உளசமூக உறவுகளை புலம்பெயர்ந்தோரின் சொந்த இடம் அல்லது பழக்கமான வசிப்பிடத்திற்குள் மீண்டும் நிறுவுவதை உள்ளடக்குகின்றது. இந்த ஆய்வு, சம்பந்தப்பட்ட தெற்காசிய கொழும்பு செயன்முறை உறுப்பு நாடுகளான ஆப்கானிஸ்தான், பங்களாதே', இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள மீள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை விரிவான முறையில் வரைபடமிட்டு அவற்றின் செயல்திறனை மதிப்பீடு செய்தது.

IOM ஆல் நிதியளிக்கப்பட்ட **இலங்கையின் அபிவிருத்தி உத்திகளில் புலம்பெயர்வினை உள்வாங்குதல்** பற்றிய ஆய்வு, அபிவிருத்திக்குள் புலம்பெயர்வினை இடம்பெறச் செய்வதைப் பற்றிய நோக்கெல்லையை காணும் ஒரு பயிற்சியாக அமைந்தது. மேலும், இலங்கையில் புலம்பெயர்தல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பைப் பற்றிய ஆதார அடிப்படையிலான தரவுகளை உருவாக்குவதற்கு நாட்டுக்குரிய ஒரு ஆரம்ப மதிப்பீட்டை வழங்கியதுடன் எதிர்கால அபிவிருத்தி உத்திகளுக்கான பரிந்துரைகளை வழங்கியது. இந்த ஆய்வு, IOM நிதியளிப்புப் பிரிவான புலம்பெயர்வுக்கான வள ஒதுக்கீட்டுக் குழுவின் (MIRAC) ஆதரவுடன், "ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளில் பயனுள்ள ஐ.நா. ஈடுபாட்டிற்கான ஆற்றல்களை மேம்படுத்துதல்" என்ற தலைப்பிலான தற்போதைய பிராந்திய கருத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

கொள்கைக் குழுக்கள்:

- தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட **ஊழியர் புலம்பெயர்வுக்கான தேசிய ஆலோசனைக் குழு,**

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- **புலம்பெயர் ஊழியர்கள் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய்: வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களிடமிருந்து சான்றுகள்,** பிலேஷா வீரரத்ன, இரண்டு தாயகங்கள், எண். 56/2022, ஸ்லோவேனியன் புலம்பெயர்வு நிறுவகம், 2022.

- **புலம்பெயர் ஊழியர்கள் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய்: வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களிடமிருந்து சான்றுகள்,** பிலேஷா வீரரத்ன, இரண்டு தாயகங்கள், எண். 56.˙.2022, ஸ்லோவேனியன் புலம்பெயர்வு நிறுவகம், 2022.

- இலங்கையிலிருந்து **மாணவர்கள் புலம்பெயர்வதை புரிந்துகொள்ளுதல்,** பிலே'ா வீரரத்ன, ஹரினி வீரசேகர மற்றும் திலினி பண்டார, கொள்கை கலந்துரையாடல் சுருக்கம், இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம், பெப்ரவரி 2022.

■ கருத்துத் தளங்கள்:

- **இளைஞர் புலம்பெயர்வு: இலங்கைக்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்,** திசுரி ஏகநாயக்க, *பேசும் பொருளாதாரம்,* பெப்ரவரி 7 மற்றும் தி மோனிங், சிலோன் டுடே, தி ஐலண்ட், சன்டே ஒப்சர்வர், லங்கா பிஸ்னஸ் ஒன்லைன் அத தெரண ஆகியவற்றில் பத்திரிகை வெளியீடுகள்.˙.ஊடகங்கள்.

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- **ஊழியர் புலம்பெயர்வுக்கான திறன்கள்,** பற்றிய TVEC மற்றும் ILO பல பங்குதாரர்களின் கலந்தாலோசனையில் ஒரு குழு கலந்துரையாடலில் தலைமை வகித்தல், வோட்டர்ஸ் எட்ஜ், ஜனவரி 24 (பிலேஷா வீரரத்ன).

- ஸ்ரீலங்கா நிதஹஸ் சேவக சங்கமயவினால், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த **'புலம்பெயர்ந்த ஊழியர்களின் பிரச்சினைகள்' என்ற கருத்தரங்கில், கோவிட்-19 மற்றும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் பின்னணியில் புலம்பெயர்ந்த ஊழியர்களின் தற்போதைய நிலைமை** பற்றிய சமர்ப்பணம், ஜூன் 22 (பிலேஷா வீரரத்ன)

புலம்பெயர்வு மற்றும் பணம் அனுப்புதல்

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மத்தியில் இலங்கைக்கு பணம் அனுப்பும் விடயமானது முறைசார்ந்த வழிமுறைகளில் அல்லது முறைசாராத வழிமுறைகளில் அனுப்பப்படுகி□ன்றது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்நிலையில், ஜெனீவா, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐடுழு) நிதியுதவியுடன், **ஊழியர் புலம்பெயர்வு மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான தெற்காசியா மையத்துடன் (SALAM) புலம்பெயர்ந்தோரின் உரிமைகளைப் பாதுகாத்தல்** மற்றும் கண்ணியமான வேலையை மேம்படுத்துதல் என்ற திட்டத்தின் கீழ், கற்கைகள் நிறுவகம் முறைசாரா பணம் அனுப்புதலை புரிந்துகொள்ளுதல்: இலங்கையின் அனுபவம் பற்றிய ஒரு ஆய்வில் ஈடுபட்டுள்ளது. முறைசாரா பணம் அனுப்பும் சந்தைகளில் மறைந்திருக்கும் செயல்பாடுகளின் உள்ளார்ந்த குணாதிசயங்களைக் கருத்தில் கொள்ளுமிடத்து தரவு மற்றும் சான்றுகள் தொடர்பாக வரையறுக்கப்பட்ட புரிதலும் கடுமையான வரம்புகளும் காணப்படுகின்றன. ஆய்வுசார் இலக்கியத்தில் உள்ள இந்த இடைவெளிகளை ஒப்புக் கொள்ளும் அதே வேளையில், பண்புசார் தரவு மற்றும் தொனிப்பொருள் பகுப்பாய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி இலங்கையின் விடயத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் முறைசாரா பணம் அனுப்புதல் பற்றிய புரிதலை விரிவுபடுத்துவதை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

கல்வி நோக்கங்களுக்காக புலம்பெயர்தல் இலங்கையில் இருந்து வெளிச்செல்வதற்கான அதிகரித்துவரும் முறையாக மாறியுள்ளது. ஆயினும்கூட, இலங்கையில் இருந்து மாணவர் புலம்பெயர்தல் பற்றி முறையானதும் அனுபவ ஆதார அடிப்படையிலானதுமான சமூக-பொருளாதார புரிதல் வரையறுக்கப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது. இத்தகையதொரு சூழமைவில், IPS மூலம் நிதியளிக்கப்பட்ட **மாணவர் புலம்பெயர்வு** குறித்த ஆய்வானது, இலங்கையை தாய்நாடாக கொண்ட மாணவர்கள் உயர்கல்விக்காக இடம்பெயர்வது பற்றிய ஆரம்ப நோக்கத்தையும் புரிதலையும் வழங்கியது. இதனுடன் சம்பந்தப்பட்ட பிரிவு இந்த ஆய்வுகளை 2022 இல் நிறைவுசெய்தது.

இலங்கையில் இருந்து அண்மைக்காலமாக புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீது கோவிட்-19 இன் தாக்கம் குறித்த IPS இன் ஆய்வு, ஊழியர் புலம்பெயர்வுக்கான ஆராய்ச்சி மற்றும் அனுபவப் பகுப்பாய்வு (REALM) உடன் இணைந்து, முதன்மை தரவு சேகரிப்பு பயிற்சியின் மூலம் புலம்பெயர்ந்தோர் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீது கோவிட்-19 இன் தாக்கத்தை ஆராய்ந்தது. இந்த ஆய்வானது, கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட பல்வேறு குழுக்களிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதிப்பு, சென்று சேர்ந்த நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பாதகமான தாக்கங்கள், தனியாக

தொலைதூர நாட்டில் தங்களது உறவு இன்னலுக்கு முகம்கொடுத்துள்ள நிலை தொடர்பாக ஏற்படும் மனஉளைச்சல் உள்ளிட்ட இலங்கையில் விட்டுச் சென்ற அவர்களது குடும்பங்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்படுதல், மற்றும் குடும்பத்திற்கு பணம் அனுப்புவதில் வீழ்ச்சி மற்றும் / அல்லது புலம்பெயர்ந்த ஊழியர் தீடீரென நாடு திரும்புவதால் வழக்கமான வருமான ஓட்டம் சீர்குலைதல் போன்ற பல்வேறு விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.

பொருளாதார நிலை 2022 அறிக்கையில் **இலங்கையில் பொருளாதார மீட்சிக்கு உதவும் வகையில் புலம்பெயர்தல் மற்றும் பணம் அனுப்புதல்** பற்றி பிலோ'ா வீரரத்ன, திலினி பண்டார மற்றும் திசுரி ஏகநாயக்க ஆகியோரின் ஒரு அத்தியாயம் ஊழியர் புலம்பெயர்வின் அண்மைக்கால போக்குகள் மற்றும் பிரச்சினைகள், புலம்பெயர்வு சார்ந்த பாதிப்புகள் மற்றும் மாற்று வீதங்கள், கிரயம் மற்றும் ஊக்கம் தளரச் செய்யும் சட்ட விதிகள் போன்ற பணவனுப்பல்களை பாதிக்கும் காரணிகளைப் பற்றி கலந்துரையாடுகின்றது. மேலும், இந்த அத்தியாயத்தின் எழுத்தாளர்கள் பணம் அனுப்புவதுடன் தொடர்புடையதாக புலம்பெயர்ந்த மாணவர் எதிர்கொள்ளும் சிக்கல்களை எடுத்துக்காட்டுவதுடன் பாதிப்புகளைக் குறைக்கும் அதே வேளையில் முறையான பணம் அனுப்பும் வழிமுறைகளை அணுகுவதை மேம்படுத்தும் பொருட்டு குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை பரிந்துரைக்கின்றனர்.

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- **புலம்பெயர்வு மற்றும் பொருளாதாரப் பணம் அனுப்புதல்: அபிவிருத்தி மீதான தாக்கம்,** பிலோ'ா வீரரத்ன, குடிவரவு மற்றும் அகதிகள் ஆய்வுகள் பற்றிய ரூட்லெட்ஜ் கையேட்டில் அத்தியாயம் 27, திருத்தியமைத்தல்: Triandafyllidou, யு. சுழரவடநனபந, 2022

■ கருத்துத் தளங்கள்:

- பிலோ'ா வீரரத்ன, TV1 இன் குயஉந வாந யேவழைஎ நிகழ்ச்சி, ஜனவரி 17 இல் **இலங்கையின் பணப்பரிமாற்றங்களில் ஏற்பட்டுள்ள கடுமையான மாற்றங்கள்** குறித்து எடுத்துரைத்தார்.



- பிலோ'ா வீரரத்ன இலங்கையின் ஊழியர் புலம்பெயர்வு கொள்கைகள் பற்றி நியூஸ் பெஸ்ட் TV1 இன் 'The People's Platform' இல் ஜுலை 4 இல் கலந்துரயாடினார்.



- **குடும்ப பின்னணி அறிக்கையிலிருந்து சிறந்த விடுதலை: இலங்கைக்கு புலம்பெயர்ந்தோர் பணம் அனுப்புவதை அதிகரிப்பதற்கு அடுத்தது என்ன?**, பிலேர்ா வீரரத்ன, பேசும் பொருளாதாரம், ஜுலை 4 மற்றும் டெய்லி மிரர், தி ஐலண்ட் மற்றும் சண்டே ஒப்சர்வர் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள்.

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- **இலங்கை பொருளாதார நெருக்கடி: பணவனுப்பல் மற்றும் சுற்றுலாத்துறையின் பங்கு** பற்றிய சமர்ப்பணம்: நேபாள சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டிற்கான நிறுவனம் ஏற்பாட செய்த நிகழ்வு (NIICE) ஜுன் 23 (பிலேஷா வீரரத்ன)
- "தெற்காசியாவில் புலம்பெயர்வு பற்றிய 10 ஆவது தெற்காசிய பொருளாதாரக் கொள்கை வலையமைப்பு மாநாட்டில், **புலம்பெயர்ந்த ஊழியர்களின் பணம் அனுப்புதல் இலங்கையின் பெரும் பொருளாதார நெருக்கடியைத் தணிக்க முடியுமா?** நேபாளம், 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் (பிலேஷா வீரரத்ன)





உள்ளக இடம்பெயர்வு

இலங்கை பல்வேறு தீவிர காலநிலை நிகழ்வுகளுக்கு உள்ளாவதுடன் சுற்றுச்சூழல் மாறுபாடுகள் குடும்ப மட்டத்தில் குறிப்பாக வாழ்வாதாரம், உணவு பாதுகாப்பு, நீர், சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் காலநிலை மாற்றம் தொடர்பான தாக்கங்களுக்கு பதிலளிப்பதற்காக சமுதாயங்களினால் பின்பற்றப்படும் ஒரு முக்கிய உத்தியாக இடம்பெயர்வு காணப்படுகின்றது. இது தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புடன் இணைந்து **இலங்கையில் காலநிலை மாற்றம் மற்றும் இடம்பெயர்வு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகள்** பற்றிய ஆய்வில் IPS ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வு இலங்கையில் காலநிலை மாற்றம் மற்றும் இடம்பெயர்வு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை ஒரு கலப்பு முறை அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலம் புரிந்துகொள்ள உதவுகிறது

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:


- புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) ஏற்பாடு செய்த "இடம்பெயர்வுக்கும் காலநிலை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்புகளைப் புரிந்துகொள்வதற்கான ஆழமான ஆராய்ச்சி" என்ற தேசிய கலந்துரையாடல் வேலையமர்வில், **இலங்கையில் காலநிலை மாற்றம், சுற்றாடல் தரமிழப்பு மற்றும் இடம்பெயர்வு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகள்** பற்றிய அறிக்கையை சமர்பித்தார். மோனார்க் இம்பீரியல் ஹோட்டல், கோட்டே, டிசம்பர் 20 (பிலே'ா வீரரத்ன).

- புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் சுற்றாடல் அமைச்சு, டிசம்பர் 21 ஆம் திகதி ஏற்பாடு செய்த "காலநிலை மாற்றம்" தொடர்பான தேசிய வழிநடத்தல் குழுவிற்கு **இலங்கையில் காலநிலை மாற்றம், சுற்றாடல் தரமிழப்பு மற்றும் இடம்பெயர்வு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகள்** பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தார். (பிலேஷா வீரரத்ன).

நகரமயமாக்கல்

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- **அபிவிருத்தியடைந்த நகர்ப்புற போக்குவரத்து அமைப்பை நோக்கி: இலங்கைக்கான பாடங்கள்,** பிலேஷா வீரரத்ன மற்றும் சதுர்கா கருணாநாயக்க, எழுமாற்று ஆராய்ச்சி பத்திரம் தொடர் எண். 73, இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம், 2022.



1.4 புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல்

கடந்த தசாப்தத்தில் வறுமையைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், இலங்கையின் அபிவிருத்திக் சார்ந்த கொள்கை கலந்துரையாடல்களில் சமத்துவமின்மை மற்றும் எளிதில் பாதிப்படையக்கூடிய தன்மை தொடர்ந்தும் பெரும் கரிசனைக்குரிய பிரச்சினைகளாகவே உள்ளன. அத்தியாவசிய சேவைகள் மற்றும் கல்வி, சுகாதாரம், நீர் மற்றும் துப்பரவேற்பாடு மற்றும் நிதி சேவைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அணுகலில் உள்ள வேறுபாடுகள் நாட்டின் நிலவும் உயர் மட்ட வருமான சமத்துவமின்மைக்கு பங்களிக்கின்றன. கோவிட்-19 போன்ற அதிர்ச்சிகள் மூலம் பாதிக்கப்படக்கூடிய மக்கள்தொகையில் கணிசமான பகுதியினர் வறுமைக் கோட்டிற்கு சற்று மேலே செறிந்து காணப்படுவதையும் பாதகமான அதிர்ச்சிகளைத் தணிக்க போதுமான சமூக பாதுகாப்பு வழிமுறைகள் இல்லாதவிடத்து வறுமை நிலைக்குள் நழுவி விழுவதற்கான அதிக அபாயநேர்வினை எதிர்கொள்கின்றனர் என்பதும் சுட்டிக்காட்டுகின்றன.

அ) சமூக பாதுகாப்பு

இலங்கையில் பரந்த அளவிலான சமூகப் பாதுகாப்புத் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையில் உள்ள போதிலும் சமூகப் பாதுகாப்பு அமைப்புகளில் தீர்வு காணப்பட வேண்டிய பல இடைவெளிகள் / பிரச்சினைகள் உள்ளன. ஆராய்ச்சிக் குழு 2022 இல் சமூகப் பாதுகாப்பு தொடர்பான பல ஆய்வுகளை / கருத்திட்டங்களை நிறைவு செய்தது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் நிகழ்ச்சித்திட்டத்துடன் (UNDP) இணைந்து IPS நிறுவகம் **இலங்கையில் சமூகப் பாதுகாப்பு முறைமைகளின் விரிவான களநிலை வரைபடமிடல்** பற்றிய ஆய்வை நிறைவு செய்ததுடன் இந்த ஆய்வு தற்போதைய சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள், பொறிமுறைகள் மற்றும் பங்கீடுபாட்டாளர்கள், தற்போதைய டிஜிட்டல் உட்கட்டமைப்பு, மற்றும் ஒரு ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புக் கொள்கை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட முறையை நோக்கிச் செல்வதற்கு அவசியமான அனைத்து உலகளாவிய மற்றும் பிராந்திய சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை இலக்காகக் கொண்டிருந்ததது. இந்த ஆய்வு சமூகப் பாதுகாப்புத் தளங்கள் (SPF) சட்டகத்தின் (ILO பரிந்துரை இல: 202 மற்றும் உடன்படிக்கை இல: 102 இல் குறித்துரைக்கப்பட்டுள்ளது) அடிப்படையில் அமைந்திருந்ததுடன் இது சமூகப் பாதுகாப்பிற்கான வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறையைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் மக்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இது ளூகு சட்டகத்தின் நான்கு பரிமாணங்களைப் பயன்படுத்தி இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறையை விரிவாக ஆய்வு செய்தது (i) சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு, (ii) செயலூக்க வயதினருக்கான சமூகப் பாதுகாப்பு, (iii) முதியோருக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் (iv) சுகாதாரப் பாதுகாப்பு. 2022 மார்ச் 14 அன்று JAIC ஹில்டனில் UNDP ஏற்பாடு செய்த செயலமர்வில் மேற்படி ஆய்வின் கண்டுபிடிப்புகள் சமர்ப்பித்தி, மனைப் பொருளாதாரம் மற்றும் நுண்நிதித்துறை கௌரவ இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அவர்களுக்கும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.


ILO - Geneva உடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட **இலங்கையில் முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார் துறை ஊழியர்களுக்கான செயல் வயது மற்றும் ஓய்வுபெறும் வயது சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துதல்** குறித்த இந்த ஆய்வானது, தனிநபர்கள் எந்தத் துறையில் பணியாற்றினாலும் வறுமையில் இருந்து விடுபடுவதற்கு பயனுள்ள சமூகப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது. இலங்கையில் தற்போது காணப்படும் பலவீனமான சமூக பாதுகாப்பு முறைமைகள் மத்தியில் கோவிட்-19 காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் நாடு தற்போது சிரமங்களை அனுபவித்து வருகிறது. மேற்படி IPS ஆய்வானது, இலங்கையில் உள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா துறை ஊழியர்களின் செயல் வயதிலுள்ள மற்றும் ஓய்வுபெறும் வயதிலுள்ள இருசாராரினதும் நலன்களின் காணப்படும் இடைவெளிகள் மற்றும் உள்வாங்கும் தரப்பினர்களை அடையாளம் காணும் பொருட்டு தற்போதைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் வரைபடமாக்கியுள்ளது. மேலும், மேற்படி ஊழியர் குழுக்களுக்கு இலங்கையில் கிடைக்கும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான சர்வதேச தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் இந்த ஆய்வு பரிந்துரைகளை வழங்கியது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துடன் (UNICEF) சமூகப் பாதுகாப்புச் **செலவின மீளாய்வு மற்றும் அரசாங்கத்தின் கோவிட்-19 சமூகப் பாதுகாப்புப் பதிலளிப்பை ஆவணப்படுத்துதல், மற்றும் தற்போதுள்ள கொள்கைகளை மதிப்பீடு செய்தல்** பற்றிய ஜீளு இன் ஆய்வு, சமூகப் பாதுகாப்பு உத்திகளை வடிவமைத்தது. மேலும், சமூக உதவி அல்லது சமூக காப்பீட்டுத் திட்டங்கள் (“மிஸ்ஸிங் மிடில்” என்றும் அழைக்கப்படுகிறது) மூலம் பாதுகாப்பு பெறாத வயது முதிர்ந்த சனத்தொகை, சிறுவர்கள் மற்றும்

மக்கள் பிரிவுகளை பிரிவுகளை மதிப்பீடு செய்தது. ஏற்கனவே உள்ள திட்டங்களின் தனித்தன்மையை விவரிப்பதன் மூலம் தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் உள்வாங்கும் தன்மை, போதுமான தன்மை மற்றும் வாழ்க்கைச் சுழற்சி பண்புகளை மதிப்பீடு செய்ய கொள்கை வகுப்பாளர்களுக்கு வாய்ப்பினை வழங்கியது

■ ஆராய்ச்சி வெளியீடுகள்

- இலங்கையில் சமூகப் பாதுகாப்பிற்கான பொதுச் செலவினப் பகுப்பாய்வு, டீசைன, ே, திலகரத்ன, ஜி. மற்றும் டேனியல்ஸ் எல்.எம். உள்ளடங்கலான வளர்ச்சிக்கான சர்வதேச கொள்கை மையம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் (UNDP) மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) ஆராய்ச்சி அறிக்கை இல. 74, 2022



- ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய கூட்டுத்தாபனத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில்**ஆசியா-பசுபிக் பிராந்தியத்தில் சமூகப் பாதுகாப்பு உள்வாங்குகை மற்றும் முறைமைகளை வலுப்படுத்துதல்,** கங்கா திலகரத்ன, ஐக்கிய நாடுகள் சபை, நியூயோர்க், 2022 வெளியிட்ட அறிக்கை..

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்

- சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண் நிதி, சுயவேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரிடம் **இலங்கையின் தற்போதைய சமூகப் பாதுகாப்பு முறைமைகளின் விரிவான கட்டமைப்பு வரைபடமாக்கல்** தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது, JAIC ஹில்டன், கொழும்பு, மார்ச் 14 (கங்கா திலகரத்ன)



- **தற்போதைய சமூகப் பாதுகாப்பு முறைமைகளின் விரிவான கட்டமைப்பு வரைபடமாக்கல் பற்றிய சமர்ப்பணம்,** மார்ச் 20 (கங்கா திலகரத்ன)

- பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) யுனஎழஉயவய ஐளெவவைரவந ஏற்பாடு செய்த 'இலங்கையை மீளக் கட்டமைப்போம்' மாநாட்டில் **சமுர்த்தியை மீளக்கட்டமைத்தல்: சமூக பாதுகாப்பு வலைகள்** குறித்த அமர்வில் கலந்துரையாடல் குழு உறுப்பினர். ஆகஸ்ட் 5 (கங்கா திலகரத்ன)



- நிறுவனத்தின் வருடாந்த முதன்மை அறிக்கையாகிய, **இலங்கை: பொருளாதார நிலை 2022** ஐ வெளியிடுவதைக் குறிக்கும் வகையில் "நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கொள்கை நடவடிக்கையை இயக்குதல்" என்ற கருத்தரங்கில் தேசிய **கொள்கை சட்டகம் (NPF) சமூக உள்ளடக்கம் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆளுகை** பற்றிய சமர்ப்பணம், அக்டோபர் 25 (கங்கா திலகரத்ன)



■ கொள்கை குழுக்கள்:

- **சமூக பாதுகாப்பு நிதியத்தை நிறுவுவதற்கான துணைக் குழு,** தொழில் அமைச்சு. (நிஷா அருணதிலக)

ஆ) வறுமை மற்றும் சமத்துவமின்மை

கனடாவின் IDRC இன் நிதியுதவியுடன் பேராதெனிய பல்கலைக்கழகம் மற்றும் தெனாகா நே'னல், மலேசியா பல்கலைக்கழகத்துடன் இணைந்து IPS நிறுவகம், **கொவிட்-19 இற்கான அச்சுறுத்தல் மதிப்பீடு மற்றும் தடுப்புக்கான செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பு மற்றும் எதிர்கால தொற்றுநோய்கள் (AI4COVID கருத்திட்டம்)** பற்றிய ஆய்வில் (நடைபெற்றுவரும்) ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வின் நோக்கம் யாதெனில், அ) தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் உத்திகளின் கீழ் "அடையாளப்படுத்தப்பட்ட பல்வேறு குழுக்களின்" நடத்தையைக் கண்டறிதல், மாதிரியாக்கம் செய்தல் மற்றும் எதிர்வுகூறல் ஆகியவற்றிற்கு செயற்கை நுண்ணறிவு (AI) நுட்பங்களை விருத்திசெய்தல் ஆ) இலங்கை மற்றும் மலேசியாவிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து குளோபல் சவுத் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த உத்திகளின் தாக்கத்தை புரிந்து கொள்ளுதல் மற்றும், இ) எதிர்காலத்தில் கோவிட் - 19 அல்லது அதுபோன்ற தொற்று நோய்கள் பரவுவதைக் கணிக்கவும் நிர்வகிக்கவும் AI அடிப்படையிலான தீர்வுகளை விருத்தியாக்குதல் ஆகியவையாகும். உருவாக்கப்பட்ட நடத்தை மற்றும் இயக்கங்களின் அடிப்படையில், எதிர்காலத்தில் இதே போன்ற அல்லது பிற தொற்று நோய்கள் ஏற்படுமிடத்து தொடர்புத் தடமறிதல் மற்றும் சமூக-பொருளாதார தாக்கத்தைத் தணிக்கும் செயல்களை மிகவும் தகவலறிந்த, சமூக உணர்வுடன் கூடிய மற்றும் பொறுப்பான முறையில் நடாத்துவதற்கு செயற்கை நுண்ணறிவை உருவாக்க மேற்படி ஆய்வு முன்மொழிகிறது. இக் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பெண்கள், சிறுவர்கள் மற்றும் பின்தங்கிய குழுக்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தி, கோவிட்-19 இன் சமூக-பொருளாதார தாக்கத்தை ஆராயும் பொருட்டு 3000 குடும்பங்களை உள்ளடக்கிய ஒரு நாடளாவிய மதிப்பாய்வு நடத்தப்பட்டது. 2022 டிசம்பர்





19-23 காலப்பகுதியில் மலேசியாவில் நடைபெற்ற AI4COVID கருத்திட்டத்தின் இடைக்கால மீளாய்வு வேலையமர்வில் கங்கா திலகரத்னா கலந்து கொண்டார்.

2021 ஏப்ரல் - மே காலப்பகுதியில் தொற்றுநோயின் தாக்கத்தை அடையாளம் காண்பதற்கான **கோவிட்-19 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைப் பற்றிய மதிப்பீட்டு பகுப்பாய்வு** பற்றிய IPS இன் குடும்ப மதிப்பாய்வு 2022 ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. இலங்கையில் 10 மாவட்டங்களில் 300 குடும்பங்களை உள்ளடக்கிய இந்த ஆய்வு முக்கியமாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களை மையமாகக் கொண்டதாக அமைந்திருந்தது. கோவிட்-19 இன் முதல் மற்றும் இரண்டாவது கட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் நுகர்வு ஆகியவற்றில் தொற்றுநோயின் தாக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு முன்முயற்சிகளின் செயல்திறன் ஆகியவை இவ்விடயத்தில் மதிப்பிடப்பட்டன.

இலங்கை: பொருளாதார நிலை 2022 அறிக்கையில் **இலங்கையில் நிலைபேறான எதிர்காலத்திற்கான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்** பற்றிய கொள்கைச் சுருக்கம் தொடர்பான லக்ஷ்மில வணிகசிங்கவின் ஆக்கம் உயர் வருமானப் பகிர்வு ஏற்றத்தாழ்வு மற்றும் நாடுகள் மத்தியிலும் உள்ள வருமான ஏற்றத்தாழ்வுகளின் தீவிரத்தை சுட்டிக்காட்டுகிறது. மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உதவுவதில் வலுவான அரசாங்க கொள்கை நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை அவர் இங்கு வலியுறுத்துகிறார்.

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- ஜீ. இளங்கரத்ன, எச்.வெலிகம்பொல, வை.ரணசிங்க, ஈ.ஆட்டிகல, ஆர்.கொடலியத்த, வி.ஹேரத், பி.ஏகநாயக்க, எஸ்.வை. ஏகநாயக்க, எம். பின்னவெல, எஸ். தர்மரத்ன, ஜி. திலகரத்ன, ஜே. ஏகநாயக்க (2022) **"பெண்கள், சிறுவர்கள் மற்றும் பின்தங்கிய குழுக்களுக்கு சமூகப் பொருளாதாரத் தாக்கத்தைத் தணிக்கும் அதே வேளையில், கொவிட்-19 மற்றும் எதிர்கால தொற்றுநோய்களுக்கான**

அச்சுறுத்தல் மதிப்பீடு மற்றும் கட்டுப்படுத்துவதற்கான செயற்கை நுண்ணறிவு சட்டகம், இலங்கையின் தேசிய அறிவியல் மன்றத்தின் பருவ இதழ், 2022 (50) சிறப்பு 81-92

- ஜீ. இளங்கரத்ன, வை. ரணசிங்க, எச். வெலிகம்பொல, ஈ. ஆட்டிகல, ஜே. ஏகநாயக்க, எஸ். யட்டிகம்மன, எம். பின்னவல, ஆர். கொடலியத்த, வி. ஹேரத், பி. ஏகநாயக்க, ஜி.திலகரத்ன மற்றும் எஸ். தர்மரத்ன (2022) மூன்று கோவிட்-19 தொற்றுநோய் காலங்களில் கல்வி பற்றிய விரிவான கண்ணோட்டம்: இலங்கையில் பொறியியல் மாணவர்கள் மீதான தாக்கம், கல்விசார் விஞ்ஞானங்கள், மார்ச் 2022

■ கருத்துத் தளங்கள்:

- **வறுமையானவர்கள் நேயமிக்க சுற்றுலா: அதற்கு இலங்கையில் வறுமையை குறைக்க முடியுமா?,** கிழுத்து கிரிங்கோட, பேசும் பொருளாதாரம், பெப்ரவரி 14 மற்றும் டெய்லி மிரர், தி மோனிங், சிலோன் டுடே, தி ஐலண்ட் மற்றும் அத தெரண ஆகிய பத்திரிகைகளில் / ஊடகங்களில் வெளியாகிய செய்திகள்.

- **பாரபட்சத்தை முறியடித்தல்: இலங்கையில் பெண்களின் அரசியல் பங்கேற்பு அதிகரிப்பு,** லக்ீலா வணிகசிங்க, பேசும் பொருளாதாரம், மார்ச் 8 மற்றும் டெய்லி மிரர் மற்றும் சண்டே ஒப்சர்வரில் வெளிவந்த பத்திரிகை செய்திகள்.

- **இலங்கையின் ஆழமடைந்துவரும் பொருளாதார நெருக்கடி: ஏழைகளின் அவலநிலை,** லகீலா வணிகசிங்க, பேசும் பொருளாதாரம், ஜுலை 18 மற்றும் டெய்லி மிரர், தி ஐலண்ட், சண்டே ஒப்சர்வர், அத தெரண மற்றும் லங்கா பிசினஸ் ஒன்லைன் பத்திரிகை / ஊடக வெளியீடுகள்.

- **உணவுப் போராட்டம்: உணவுப் பாதுகாப்புக்கான இலங்கையின் போர்,** லகஷிலா வணிகசிங்க, *பேசும் பொருளாதாரம்,* அக்டோபர் 18 (அக்டோபர் 16 உலக உணவு தினத்தையொட்டி) மற்றும் தி ஐலண்ட் மற்றும் சண்டே ஒப்சர்வரில் பத்திரிகை வெளியீடுகள்.

இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs)

இலங்கை: பொருளாதார நிலை 2022 அறிக்கையில் கங்கா திலகரட்ன மற்றும் பினுர செனவிரத்ன ஆகியோரின் **நெருக்கடிகள் மற்றும் மீட்சி: 2030 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்** பற்றிய அத்தியாயம் தொற்றுநோய்களின் போது சில பின்னடைவுகளுக்கு முகம்கொடுத்த நிலையில் 2016 முதல் SDG களின் செயலாற்றுகையில் இதுவரை இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் வறுமை நிலைகள் அதிகரிக்கக்கூடும் என்று எழுத்தாளர்கள் எச்சரிக்கின்றனர். லக்மினி பெர்னாண்டோவின் தேசிய **அபிவிருத்தி மூலோபாயங்களில் 2030 நிகழ்ச்சி நிரலை இணைத்தல்** பற்றிய மற்றொரு அத்தியாயம், தற்போதுள்ள வலுவான தேசிய அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் வளங்களை திறம்பட ஒதுக்கீடு செய்வதற்கான அதனுடன் தொடர்புடைய செயல்முறை இல்லாத நிலையில், இலங்கையின் திட்டமிடல் செயல்முறையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இணைத்தல் மிகவும் முக்கியமானதென வாதிடுகின்றார். மேலும் இந்த அத்தியாயம் வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் சிறந்த உள்நாட்டுக் கொள்கைத் தேர்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய அபிவிருத்தி திட்டமிடல் செயன்முறைகளை திறம்பட சீரமைக்கக்கூடிய ஒரு கட்டமைப்பை ஐ.நா 2030 நிகழ்ச்சி நிரல், வழங்குகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

■ கொள்கை குழுக்கள்:

- **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான 2022 ஆம் ஆண்டின் தன்னார்வ தேசிய மீளாய்வுக்கான தேசிய வழிகாட்டுதல் குழு,** நிதி அமைச்சு.

1.5 விவசாயம் மற்றும் விவசாய வணிக அபிவிருத்தி

இலங்கையின் விவசாயத் துறை குறைந்த உற்பத்தித்திறன், வினைத்திறனற்ற வளப் பயன்பாடு மற்றும் நிலைபேறான தன்மையற்ற விவசாய நடைமுறைகளால் பாதிக்கப்பட்டுள்ளது. குறைந்த உற்பத்தித்திறன், பொருட்களின் நிலையற்ற விலைகள் மற்றும் அதிக உற்பத்திச் செலவுகள் காரணமாக ஏற்றுமதி சார்ந்த பெருந்தோட்டத் துறையும் நெருக்கடியில் உள்ளது. இவை அனைத்தும் நாட்டில் உணவுப் பாதுகாப்பின்மை, போசனை குறைபாடு மற்றும் வறுமைக்கு பங்களிக்கின்றன. இவை இனங்காணப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தின் தேசிய கொள்கை சட்டகமானது விவசாய அபிவிருத்திக்கு உயர்தரத்திலானட தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதற்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மீன்வளம் மற்றும் பால் பொருட்களை உள்ளடக்கியவாறு பாதுகாப்பானதும் போசாக்குமிக்கதுமான உணவு வகைகளை அணுகுவதற்கான வாய்ப்புகளுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் முயன்றுவருகின்றது.

உணவு பாதுகாப்பு

உக்ரேனில் ஏற்பட்டுள்ள மோதல் தெற்காசியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு முறைமைகளில் 2022 ஆம் ஆண்டில் பரவலான தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, பல்வேறு பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் வர்த்தக இடையூறுகளுக்கு இலங்கை உள்ளாவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இந்நிலையில் கொள்கை கற்கைகள் நிறுவகமானது சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம், தெற்காசியா, புது தில்லியுடன் இணைந்து **இலங்கை மீதான உக்ரைன் போரின் உணவுப் பாதுகாப்பு தாக்கங்கள்** குறித்த ஆராய்ச்சியில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வு பிராந்தியத்தில் இருந்தும் உலகளாவிய சந்தையில் இருந்தும் இலங்கை கொள்வனவு செய்யும் பெருமளவு விலை உயர்வுக்கு உள்ளாகியுள்ள குறிப்பிட்ட பொருட்கள் மீது கவனம் செலுத்துகின்றது. இந்நிலையில் தனது பிரசைகள் மீது உக்ரைன் நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் பொருட்டு மானியங்கள், சமூகப் பாதுகாப்பு வலைகள் அல்லது பிற உலகளாவிய வர்த்தகப் பங்காளிகளிடமிருந்து கொள்வனவு செய்தல் போன்ற கொள்கை நடவடிக்கைகள் மூலம் இலங்கை பின்பற்றக்கூடிய சாத்தியமான வழிகளையும் இந்த ஆய்வு ஆராயும். இறுதியாக, இலங்கையின் ஏற்றுமதிக்கான தேவை அதிகரிப்பு அல்லது உலகளாவிய சந்தைகளில் இதேபோன்ற கொந்தளிப்பைக் கையாள நாட்டைச் சிறந்த முறையில் ஆயத்தப்படுத்தக்கூடிய நீண்ட கால கட்டமைப்பு சீர்திருத்தங்கள் போன்ற மோதலில் இருந்து எழும் இலங்கை அடைந்துகொள்ளக்கூடிய சந்தை வாய்ப்புகளை இந்த ஆய்வு ஆராயும்.

வழக்கமான விவசாயத்திலிருந்து சேதனப் பசளை விவசாயத்திற்கு மாறுதல்: இலங்கையில் இரசாயன உரங்களை தடை செய்தல் பற்றிய சம்பவம், USAID நிதியளிப்பின் கீழ், வொஷிங்டன் டி.சி.யின் சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தால் (IFPRI) நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆய்வின் ஒட்டுமொத்த நோக்கம் யாதெனில் இலங்கையில் நெல் உற்பத்தித் துறையில் இரசாயன உரப் பாவனை தடையின் சமூக-பொருளாதார பாதிப்புகளை மதிப்பீடு செய்வதாகும். இந்த ஆய்வின் திட்டவட்டமான குறிக்கோள்களாக (i) இரசாயன உரப் பாவனைக்கான தடை காரணமாக நெல் விவசாயிகள் எதிர்கொள்ளும் பெரும் சவால்களை மையமாகக் கொண்டு அரிசி பெறுமதிச் சங்கிலியை பகுப்பாய்வு செய்தல் (ii) தேசிய அளவில் அரிசி உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பில் இரசாயன உரப் பாவனைக்கான தடையின் தாக்கங்களை மதிப்பிடுதல் (iii) 2021/2022 பெரும் போகத்தில் விவசாயிகளின் உற்பத்தித்திறன் மற்றும் விவசாய வருமானத்தில் இரசாயன உரத் தடையின் தாக்கத்தை ஆராய்தல் (iv) வழக்கமான விவசாய முயற்சியிலிருந்து சேதனப் பசளை விவசாயத்திற்கு மாறுதல் சார்ந்த சவால்கள் மற்றும் வெற்றிக் கதைகளை அடையாளம் காணும் பொருட்டு உலகளாவிய அனுபவங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் (v) நாட்டில் பயனுறுதிமிக்க உரக் கொள்கை சட்டகத்திற்கான கொள்கை பரிந்துரைகளை முன்மொழிதல்.

இலங்கையில் உணவு நெருக்கடியின் போது உணவுப் பாதுகாப்பு மற்றும் பட்டினியில்லா நிலை என்ற தலைப்பில் பொருளாதார நிலை 2022 அறிக்கையில் மனோஜ் திப்பொட்டுவ தனது கட்டுரையின் மூலம், உலகளாவிய எண்ணெய் விலைகளின் ஏற்ற இறக்கம், சர்வதேச உணவு மற்றும் இடைநிலை உள்ளீட்டு விலைகள், உயர் வழங்கல் செலவுகள் மற்றும் கடுமையான நாணய பெறுமதி வீழ்ச்சி ஆகியவை உணவு விலை பணவீக்கத்திற்கு கடுமையான முறையில் பங்களிப்பதுடன் இலங்கையின் உணவு நெருக்கடியை மேலும் ஆழமாக்குகிறது என்று வாதிடுகின்றார். நீண்ட காலத்திற்கு உணவின் தேவை மற்றும் விநியோகத்தை நிர்வகிப்பதன் ஊடாகவே தொடர்ச்சியான உணவுப் பணவீக்கம் மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கான உண்மையான மற்றும் நிலையான தீர்வு உள்ளது என்று இந்த அத்தியாயம் அறிவுறுத்துகிறது.

■ ஆராய்ச்சி வெளியீடுகள்:

- **உணவு நெருக்கடிக்கான காரணங்கள் மற்றும் விளைவுகள்.** மனோஜ் திபபொட்டுவாவ, இலங்கை ஏற்றுமதியாளர் சஞ்சிகை, 114வது பதிப்பு, ஏப்ரல்-ஜூன் 2022.

■ கொள்கைக் குழுக்கள்

- சனாதிபதி செயலகத்தால் கூட்டப்பட்ட **உணவுக் கொள்கைக் குழு**

■ கருத்து தளங்கள்:

- **பிம்ஸ்டெக் பிராந்தியத்தில் உணவுப் பாதுகாப்பு: இலங்கையின் மிடுக்கான விவசாயத்திலிருந்து பாடங்கள்,** மனோஜ் திப்பொடுவாவ, பேசும் பொருளாதாரம், மார்ச் 29 மற்றும் பைனான்சியல் டைம்ஸ், டெய்லி மிரர் மற்றும் தி மோர்னிங் ஆகியவற்றில் வெளியிடுகள்

■ சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்:

- **உணவுப் பாதுகாப்பு மற்றும் பிம்ஸ்டெக்: இலங்கையின் மிடுக்கான விவசாயத்திலிருந்து பாடங்கள்,** இந்தியா, தி ஒப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷன் அமைப்பினால் ஏற்பாடு செய்யபபட்டது, கலந்துரையாடல் குழு உறுப்பினர், மெய்நிகர், 29 மார்ச் (மனோஜ் திப்பொட்டுவாவ).

- இலங்கை பொருளாதார சங்கம் (SLEA) ஏற்பாடு செய்த **இலங்கையில் வரவிருக்கும் உணவு நெருக்கடி: காரணங்கள், விளைவுகள் மற்றும் தீர்வுகள்** பற்றிய கருத்தரங்கில் கலந்துரையாடல் குழு உறுப்பினர், மெய்நிகர், ஏப்ரல் 2 (மனோஜ் திப்பொட்டுவாவ)


